[illegible]

[illegible] 17 [illegible] 61

15 [illegible] 1935

JL
[illegible] 11, N02 GS
N35·17.6,7
210477

ஓம்

ஞானசாகரம்

(அறிவுக்கடல்)

JNANASAGARAM

இது
முப்பத்திரண்டு ஆண்டுகளாக நடைபெறுந்
தனிச் செந்தமிழ் வெளியீடு

A BI-MONTHLY

திருவள்ளுவர் ஆண்டு ௧௯௬௬, புரட்டாசி, ஐப்பசி

திருமலர், ௧௭.] [இதழ், ௬, ௭.

பொருளடக்கம்

முற்கால பிற்காலத் தமிழ்ப்புலவோர் (தொடர்ச்சி)
(Ancient and Modern Tamil Poets),
இளைஞர்க்கான இன்றமிழ் (தொடர்ச்சி)
(Pure Tamil Reader for the Young, second book),
தொலைவிலுணர்தல் (Telepathy), தொடர்ச்சி.

ஆசிரியர் :
மறைமலையடிகள் என்னும்
ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்கள்,
SWAMI VEDACHALAM.
பொதுநிலைக்கழக குரு,
பல்லாவரம்
PALLAVARAM

பொதுநிலைக்கழக நிலையத்தின்கண் உள்ள
திருமுருகன் அச்சுக்கூடத்திற்
T. M. PRESS
பதிப்பிக்கப்பட்டது.

15th May., 1935

ஒரு திருமலர்க் கையொப்பம்] [நான்கு ருபா

All Rights Reserved.

திருவள்ளுவர் திருநாட் கழகம்

6, பவளக்காரத் தெரு, சென்னை.

உலகத்துப்புலவர்களின் நடுமாமுழுமணியாயும் ஒழுக்கத்திற்கு உறையுளாயும் தமிழ்மொழிக்கு உயிர்நிலையாயும் இலகும் திருவள்ளுவநாயனார் திருநாளைக் கொண்டாடுவது தமிழரின் கடமையன்றோ? இதுகருதி இவ்வாண்டுமுதல் ஆண்டுதோறும் வள்ளுவர்தந் திருநாளாய வைகாசி அனுடத்தன்று வள்ளுவர் விழாக் கொண்டாடுதற்கான முறைகளைத் தேர்ந்து அமைப்பதற்காகவே இக்கழகம் கூட்டப்பட்டது. தமிழ்நாட்டிற்கும், தமிழ்மக்கட்கும், தமிழ்மொழிக்கும் இயன்றவரையில் எத்துறையிலும் பணியாற்றி வருவதே இக்கழகத்தின் பொதுநோக்கமாயினும், இதன் சிறப்பான நோக்கங்கள் பின்வருவனவாம்:—

இக்கழகத்தின் நோக்கங்கள் :

1. பொதுமறையாகிய திருக்குறளைப் பயந்த திருவள்ளுவரின் திருநாளை ஆண்டுதோறும் நாடெங்குஞ் சிறப்பாகக்கொண்டாடச் செய்தல்.

2. திருவள்ளுவர் திருநாளன்று ஆங்காங்கு ஏழைகளுக்கு உணவளிப்பதற்கான முறைகளைத் தேடி அமைத்தல்.

3. திருவள்ளுவர் பெயரால் ஒரு "நினைவு மலர்" அச்சிட்டுத் திருநாளன்று அடக்க விலைக்குத் தருதல்.

4. இந்தியாவிலுள்ள திருந்திய மொழிகளில் எந்தெந்த மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப் படாதிருக்கின்றதெனத் தெரிகிறதோ அந்தந்த மொழிகளில் அதனை மொழிபெயர்க்கச் செய்தல்.

5. சென்னை மாகாணத்திலுள்ள எல்லாப் பல்கலைக்கழகங்களிலுந் தமிழ் மொழியில் முதன்மையாகத் தேர்வுபெறும் மாணவர்களுக்கு நூல்கள், பதக்கங்கள் முதலிய பரிசுகளை யளித்தல்.

6. திருவள்ளுவர் பண்டசாலை யொன்று சென்னை நகரிலே நிறுவுதற்கான முறைகளைத் தேடியமைத்தல்.

7. எத்திறத்தார்க்கும் பொதுவாகப்பயன்படுமாறு தலைநகராகிய சென்னையின்கண் ஒருமன்றம் அமைத்தல்.

8. ஒரு பொதுநூல்நிலயத்தை மன்றத்தி லமைத்தல்.

9. மன்றத்தின் நடுவே தெய்வப் புலவர் திருவள்ளுவரின் உருவச்சிலையொன்றைப் பளிங்கினாற் செய்து நிறுத்தல்.

மேற்கண்ட இந்நோக்கங்கள் எளிமையாகவும், இனிமையாகவும் நிறைவேறுதற் பொருட்டு இக்கழகத்தினுக்குப் பெருந்தொகையினரான உறுப்பினர்களை நாடெங்குஞ் சேர்த்தல் கட்டாயமாகும். சாதி, மத வேற்றுமையின்றி, எல்லாரும் இக் கழகத்திற்கு உறுப்பினராகுந் தகுதியுடையராவர். ஆண்டுக்குக் கட்டணம் 4 அணு செலுத்துவோர் இக் கழகத்தின் உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்படுவர். ரூ. 5 கொடுப்பவர் இதற்கு வாழ்நாள் உறுப்பினராவர். ரூ. 10-ம் அதற்கு மேலுங் கொடுப்பவர் காப்பாளர் (Patron) ஆவர்.

இவ்வாண்டு வள்ளுவர் விழா யுவ வைகாசிமீ ரு-ம் நாள் (18-5-1935) நடைபெறும்.

இங்ஙனம்,

கா. நமச்சிவாய முதலியார்,
தலைவர்.

பா. கண்ணப்ப முதலியார்,
அமைச்சர்

வர், சேரமான்தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை என்னுந்தம்மரசனது அரண்மனையிற் பல இடங்களின் காட்சிகளையும் நோக்கிக்கொண்டு வருகையில், அவ்வரசனது போர் முரசம் ஒன்று மிகவுந்தூய்மையாகவைத்துப் பாதுகாக்கப்படும் ஓர் அறையினுள்ளே வந்துசேர்ந்தனர். அப்போது அப்போர் முரசம் நீராடிவருதற்பொருட்டு நீர்த்துறைக்குச் சென்றிருந்தது; அது வைக்கப்படுங்கட்டிலோ எண்ணெய் நுரையை முகந்துவைத்தாற்போலும் மெல்லணையிடப்பட்டிருந்தது. அது கண்ட, அப்புலவர் பெருந்தகை அக்கட்டிலின்மேல் ஏறிப் படுத்தார். படுத்தஅவர் தம்மை அறியாமலே அயர்ந்துறங்கி விட்டனர். அந்நேரத்தில் அப்பக்கமாய்ப்போந்த சேரவேந்தன், தனது போர்முரசு இருத்தற்குரிய அக்கட்டிலின்மேன் மோசிகீரனார் நன்கயர்ந்து உறங்குதல்கண்டு, அவர்மேற் சிறிதுஞ் சினவானாய்ப், பின்னும் அவர்மீது அன்புமிகப்பெற்று, அருகிருந்ததொரு கவரியினைக் கைக்கொண்டு, இன்னும் அவர் நன்றாய் உறங்குதல்கருதி, மென்காற்று அவர் மேற்பட வீசுவானாயினன். பின்னர்ச் சிறிது நேரத்திலெல்லாம் உணர்வு கூடி யுறக்கம்நீங்கி யெழுந்த மோசிகீரனார் தம்மருகே சேரவேந்தன் நின்றபடியாகத் தமக்குக் கவரிவீசுதலைக்கண்டு முதலில் திடுக்கிட்டு, அதன்பின் மனவமைதியுற்று, அவனது தமிழ்ப்பேரன்பின்றிறத்தினை வியந்து,

"மாசுஅற விசித்த வார்புறு வள்பின்
மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை
ஒலிநெடும் பீலி ஒண்பொறி மணித்தார்
பொலங்குழை உழிஞையொடு பொலியச்சூட்டிக்
குருதி வேட்கை உருகெழுமுரசம்
மண்ணி வாரா அளவை எண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியாது ஏறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉஞ் சாலும் நற்றமிழ் முழுது அறிதல்;
அதனொடும் அமையாது அணுகவந்துநின்
மதனுடை முழவுத்தோள் ஓச்சித் தண்ணென

வீசியோயே வியலிடங் கமழ,
இவண் இசை உடையோர்க்கல்லது அவணது
உயர்நிலை உலகத்து உறையுள் இன்மை
விளங்கக் கேட்ட மாறுகொல்
வலம்படு குருசில் நீ ஈங்கிதுசெயலே" என்னும் அரிய செய்யுளை அவனை நோக்கிக் கூறினர்.

"இம் மென்பூஞ்சேக்கைமீது, அது மிகவுந் தூயதாக வைத்து நின்னால் ஓம்பப்படுதலையறியாமல், ஏறித்துயின்று பெருந்தவறிழைத்த என்னை நீநின் வாளால் இருகூறுகவெட்டி வீழ்த்தவேண்டியிருக்க, நீ அங்ஙனஞ்செய்யாதுவிட்டது, நீ தமிழ்முழுதும் நன்கறிந்து அதனால் தமிழறிவுமிக்காரது அருமையினை இனிதுணர்ந்த பயன் அன்றோ! அதுவேயுமன்றி, எனதருகேவந்து நின்று நீ கவரிகைக்கொண்டு என்மேல் மெல்லிய குளிர்ங்காற்றுப்பட இவ்விடமெல்லாம் மணக்கும்படி வீசிய பரிசை எண்ணிப்பார்க்குங்கால், இவ்வுலகத்தில் இங்ஙனஞ்செயற்கரியசெய்து பெரும்புகழ்பெற்றார்க்கல்லது பிறர்க்கு மறுமைக்கண் உயர்ந்த இன்பஉலகத்தில் இருத்தல்வாயாது என்பதனை நீ விளங்கக்கேட்ட பெற்றி புலனாகின்றதன்றோ?" என்னும் இப்பாட்டின் கருத்துப்பொருள், அச்சேரமன்னனது தமிழறிவின் மாட்சியினையும், அவன் இம்மையிற் கற்றாரை யோம்புதல் முதலான செயற்கரியசெய்து பெரும்புகழ்பெற்று விளங்குதலையும், அதனான் அவன் மறுமைக்கண்ணும் இன்னுஞ் சிறந்த இன்பவுலகத்தைப்பெறுதல் திண்ணமாதலையும் மிகவும் நயமாக உள்ளடக்கி நிற்றல் வியக்கற்பாலதாயிருக்கின்றது.

இன்னும், பழையதமிழ்வேந்தர்கள் தமக்குநண்பராயுள்ள தமிழ்ப்புலவோர் ஒரோவொருகால் தம்மைவெகுண்டு ஏசிய வழியும், அதற்காகத் தாம் அவர்மேற்சினவாது பொறுமையோடிருந்து, பின்னர் அப்புலவோராற் பாராட்டப்பட்ட வரலாறுகளும் பல. அவைதம்முள் ஒன்றனை இங்கெடுத்துக்காட்டுவாம். சோழன் நலங்கிள்ளி என்னும் மன்னர் பெருமானின் தம்பி மாவளத்தானுந் தாமப்பல்கண்ணன் என்னும்புலவர்பெருந்தகையும் வட்டாடிக்கொண்டிருந்தவழிப், புலவர் அவ்வாட்டத்தில் ஏதோ சூதுசெய்ய, அதுகண்டுபொறுத அவ்வரசிளஞ் செல்வன் வெகுண்டு தன்கையிலிருந்த வட்டை வீசியெறியத், தாமப்பல்கண்ணனார் "நீ சோழனுக்குப்பிறந்தாய் அல்லை!" என்று மிகவுங்கொடுமையான சொல்லால் அவனை இழித்துப் பேசினர். அக்கொடுஞ்சொற்கேட்டும், மாவளத்தான் அவர் மேற் சீற்றங்கொள்ளாது, வாளா நாணித் தலைகவிழ்ந்திருந்தனன். இதற்குட்சினந்தணிந்த அப்புலவர், தாம் சூதுசெய்தது கண்டு அவன் வெகுண்டது முறையேயாமென்றுந், தாஞ்செய் பிழையினைத் தாம் உணராமல் தாம் அச்சிறந்த அரசிளஞ் செல்வனை அத்துணைக்கொடுஞ் சுடுசொல்லால் இழித்துப்பேசியது பெரும்பிழையேயாமென்றும், இங்ஙனம் இருகாற் றவறிழைத்தவழியுந் தமக்கு ஏதுந்தீதுபுரியாது வாளாநாணியிருந்தது அவற்கு ஒருபெரு மேதகு குணமேயாமென்றுந் தெளியவுணர்ந்து,

"தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி அஞ்சிச் சீரைபுக்க
வரையா ஈகை உரவோன் மருக!
நேரார்க் கடந்த முரண்மிகுதிருவிற்
றேர்வண்கிள்ளி தம்பி வார்கோற்
கொடுமர மறவர் பெரும! கடுமான்
கைவண் டோன்றல் ஐயம் உடையேன்,
ஆர்புனை தெரியல்நின் முன்னோர் எல்லாம்
பார்ப்பார் நோவன செய்யலர், மற்றிது
நீர்த்தோ நினக்கென வெறுப்பக் கூறி
நின்யான் பிழைத்தது நோவாய் என்னினும்
நீ பிழைத்தாய் போல் நனிநாணினையே!
தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்குஞ் செம்மல்
இக்குடிப் பிறந்தோர்க்கு எண்மை காணுமெனக்,
காண்டகு மொய்ம்ப காட்டினையாலின்,
யானே பிழைத்தனென்! சிறக்கநின் ஆயுள்!
மிக்குவரும் இன்னீர்க் காவிரி
எக்கர்இட்ட மணலினும் பலவே!" (புறநானூறு, ௪௩)

என்னும் உருக்கமான செய்யுளை மனங்குழைந்துரைத்து, அவ்வரசிளஞ்செல்வன் உள்ளத்தைக் குளிரச்செய்தனர். இங்

ஙனம் ஒரு புலவர் தாம் நடுவிகந்து பிழைசெய்தும், அப்பிழையினைத் தாம் உணராமையேயன்றிப், பிழையேதுஞ் செய்யாத ஓர் அரசிளஞ்செல்வனையுங் கொடியதோர் இழிமொழியால் இகழ்ந்துபேசியது எத்துணைப்பெருஞ் சீற்றத்தை விளைக்கத் தக்கதாகும்! நிலையிற்குறைந்தவரே இத்தகைய குறும்பினைப் பொறார். அங்ஙனமாக, மாப்பெருஞ்செல்வத்திலுந் தலைமையிலும் உயர்ந்துதிகழும் ஓர் அரசிளைஞன் அத்தகுதியில் செயலைப் பொறுத்திருப்பதென்றால், அஃது அவனுள்ளம் அறிவாலும் அன்பாலும் எத்துணை மென்பதம் வாய்ந்து அமைதியுற்றிருக்கவேண்டுமென்பதனை இனிதுபுலப்படுக்கின்றது! இதனை அப்புலவர்பெருமானே மேற்கிளந்தசெய்யுளில் "நின்யான் பிழைத்தது நோவாய் என்னினும், நீ பிழைத்தாய்போல் நனி நாணினையே!" எனக்கூறுமாற்றானும், இங்ஙனம் பெரும்பிழை செய்தாரையும் பொறுத்தல் அவ்வரசிளைஞன்றன் அரசகுடியிற் பிறந்தார்க்குத் தொன்றுதொட்ட விழுப்பேரொழுக்கமாய்ப் போதருகின்றசிறப்பினை அவர் "தம்மைப் பிழைத்தோர்ப் பொறுக்குஞ்செம்மல், இக்குடிப்பிறந்தோர்க்கு எண்மைகாணும்" எனத்தெரிக்குமாற்றானும் நன்குணரலாம். இதனையும் இதனையொத்த வேறுபழையவரலாறுகளையும் ஆய்ந்தறியுங்காற், பழையதமிழ்வேந்தர்கள் தமக்குத் தமிழ்வல்லார் செய்த பெரும்பிழைகளையும் அகத்துக்கொள்ளாது, அவரை யென்றும் ஒருதன்மையாகவே பாராட்டிவந்தனரென்பதுங், கற்றாரேயன்றி மற்றையார் செய்த பிழைகளையும் அவர் மிகப்பொறுத்து எதனையும் ஆய்ந்தோய்ந்துபார்த்து முறைசெய்யும் இயல்பினராய் ஒழுகினரென்பதுந் தெற்றென விளங்காநிற்கின்றன.

இன்னும், பண்டைத்தமிழ் அரசர்கள் தமது உயிர்வாழ்க்கையினுந் தமிழ்வல்ல சான்றோரின் உயிர்வாழ்க்கையினையே மேலதாகக்கருதி, அவரை நீடுஇனிது வாழச்செய்வதிற் கண்ணுங்கருத்தும் உடையராயிருந்த அரும்பெருந்தகைமையுஞ், சிற்சிலவரலாறுகளாற் புலனாகின்றது. இதற்கோர் உண்மை வரலாற்றினை ஈண்டெடுத்துக்காட்டுதும். ஈகையிற்சிறந்த வள்ளற்பெருமானாகிய **அதியமான் நெடுமான் அஞ்சி** என்பான் நீண்ட உயிர்வாழ்க்கையினைத் தருவதாகிய ஒரு கருநெல்லிக்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 MAY 1935
MADRAS

கனியினை ஒருகால் தான் அரிதிற்பெற்றனன். [illegible] அது தன்னையுண்டார்க்கு உடல்உரம் மனஉரங்களை உண்[illegible] அவரது உயிர்வாழ்க்கையினை மிகவும் நீளச்செய்வதொன்றாதலால், அஃதெல்லார்க்கும் எளிதிற்கிடைப்பதன்றென்றும், அத்துணை அரிதாகிய ஒருகனியினை அரசனாகிய தான் உட்கொண்டு நீண்டகாலம் உயிர்வாழ்வதினும் அறிவிற்சிறந்த தமிழ்ப்புலவர் ஒருவர் உண்டு நீடுவாழ்வதே உலகத்திற்குப் பெருநன்மை பயக்குமென்றும் நினைந்துபார்த்தான்; பார்த்துத், தான் அறிந்த தமிழ்வல்லசான்றோரில் ஔவையாரே மிகச் சிறந்தவரெனவும், அவர் அப்போது முதுமைமிக்குச் சாநாளைத் தலைப்படுதலால் அவர் அக்கருநெல்லிக்கனியினை அருந்திச் சாதல்நீங்கி நீடுவாழ்தலே நன்றாமெனவுங்கருதி, அதனை அவர்கையிற்றந்து அவர் அதனை உட்கொண்டு பின்னும் பல ஆண்டுகள் நன்குயிர்வாழுமாறு செய்தனன். வறுமையும் நோயும் இன்றி எல்லாச் செல்வங்களிலுந்தழைத்து இனிதுவாழும் ஓர் அரசன் பின்னுந் தான் வலிவுடன் வாழ்தற்கு ஓர் அருமருந்து பெற்றனனாயின் அதனைத் தான் அருந்தி நீடினிது வாழ விழைகுவனேயல்லது, அதனைச் செல்வவாழ்க்கையில் இல்லாப் பிறர் ஒருவர்க்குக் கொடுக்கச் சிறிதுமே மனந்துணியான். ஏனெனில், மக்களையன்றி ஏனைச்சிற்றுயிர்களுங்கூடத் தாம் உயிர்வாழவே விரும்புமல்லது, தம்முயிரைத்துறந்து பிறவுயிரை வாழ்விக்கத் துணியா; இஃது எல்லாவுயிர்களிடத்துமுள்ள பொதுவியற்கையாகும். ஆனால், தம்முயிரையும் நீத்துப் பிறவுயிரைப் புரக்குந்தன்மையோ எல்லாவுயிர்களிடத்தும் அங்ஙனம் பொதுவகையாற் காணப்படாமல், அறிவும் அன்பும் ஆற்றலும்மிக்க ஒருசில வுயிர்களிடத்துமட்டுமே ஓரோவொருகாற் சிறப்புவகையாற் காணப்படுவதாகும். ஆகவே, அதியமான் நெடுமான்அஞ்சி யென்னும் வள்ளற்பெருந்தகை தான் நீடுவாழ்தலைவேண்டாது, தமிழ்ப்புலமைசான்ற ஔவையார் நீடுவாழ்தலைவேண்டித் தான் அரிதிற்பெற்ற அக்கருநெல்லிக்கனியினை அவர்க்கு அளித்தவள்ளன்மை பெரிது! பெரிது! அதனாலன்றோ அவன் ஔவையார் திருமொழியால்,

"வலம்படு வாய்வாள் ஏந்தி ஒன்னார்

களம்படக் கடந்த கழல்தொடித் தடக்கை
ஆர்கலிநறவின் அதியர் கோமான்
போரடுதிருவிற் பொலந்தார் அஞ்சி!
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீல மணிமிடற் றொருவன்போல,
மன்னுகபெரும! நீயே! தொன்னிலைப்
பெருமலை விடரகத்து அருமிசைக்கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே" (புறநானூறு, ௯௧)

என்று பாராட்டி வாழ்த்தப்பட்டனன்! "தன்னையுண்டவர் வாழ்நாளை நீள்விக்கும் அரியதொரு நெல்லிக்கனியினை நீ அரிதிற்பெற்றும், அதனையுட்கொண்டு நீயுயிர்வாழ நினையாமலும், அஃது அத்துணைமேதக்கது ஆதலை எனக்குத்தெரிவியாமல் நின்னுள்ளத்தே அடக்கிவைத்தும், யான் சாதல் நீங்கி நீடுவாழுமாறு அதனை எனக்கே அளித்தனை! அதனால், தேவர்பிறரெல்லாந் தாஞ்சாவாமைப்பொருட்டு ஒருமருந்து பெற்று அதனை அயின்றுஞ் சாக்காடு தீர்ந்திலராகத், தன்னை அணுகினாரை உடனேகொல்லும் ஒருகொடுநஞ்சை அத்தேவர்கள் சாவாமைப்பொருட்டுத் தான் அயின்றுந் தான் ஊறுபடாதிருந்த 'நீலமணிமிடற்றொருவ'னாகிய சிவபிரானைப்போல் நீ என்றும் நிலைபேறுற்று வாழ்வாயாக!" என்று ஔவையார் இதன்கட்கூறிய வாழ்த்துரைப் பொருளை உண்ணுழைந்து நோக்குங்கால், உயர்ந்தோர் பிறர் வாழவேண்டுமென விரும்பாது தாமே வாழவேண்டுமென நினைப்பவர் தம்மைப்பற்றிய அந்நினைவால் நீடுவாழாதொழிவரென்பதூஉம், பிறர்வாழ்தலையேவேண்டித் தமக்குவரும் ஊறுபாட்டையும் நோக்காது அவர்க்கு நன்றுசெய்பவர் அவ்விழுமிய நினைவாகிய அருமருந்தால் தம்மையறியாமலே தாம் நீடுவாழ்வரென்பதூஉம் அவர் அதன்கண் அறிவுறுத்திய மனவியல்நுட்பம் இனிதுவிளங்கா நிற்கின்றது. இவ்வாறெல்லாம் பண்டைத்தமிழ்ப்புலவர் தம்மினும் நீடினிதுவாழ்தலையே அவர்காலத்திருந்த அரசர்களெல்லாம் வேண்டிநின்றமையால், பழையதமிழகமானது தமிழ்

வளங்கெழுமித்திகழ, அதன்கண் உயிர்வாழ்ந்திருந்த பழந் தமிழ்மக்களெல்லாம் உயிரும் உடம்புஞ்செழித்து அறிவிலும் அன்பிலும் நாகரிகத்திலுந் தலைசிறந்து, இறைவனது அருட்பேற்றிற்குரியராய் விளங்காநின்றனர் என்பது.

அரசர்க்குரிய கடமை

மேற்கூறியவாறெல்லாம் அரசர்களும் புலவர்களாய்ப், புலவர்களும் அரசர்களாய். ஒரோவொருகாற் புலவர்கள் அரசர்களினும் மிக்க சிறப்புந்தலைமையும் வாய்ந்தவர்களாய், அவ்விருதிறத்தாருந் தம்மில் அளவளாய்வாழ்ந்த அப்பழங்கால நிலை இஞ்ஞான்றைத் தமிழ்நாட்டுநிலைக்கு எத்துணை வேறுபட்டதாய் இருக்கின்றது! அப்பழைய தமிழ்க்கால நிலையினை ஒப்பதொன்று இஞ்ஞான்று காணல்வேண்டுமாயின், அதனை இஞ்ஞான்றை மேல்நாட்டவரிடத்தேதான் காணலாம். மேல்நாட்டு அரசர்களெல்லாருங் கல்வியில் வல்ல புலவர்களாய், அங்குள்ளபுலவர்களுஞ் செல்வத்தின்மிக்க அரசர்களாய்ச், சிற்சிலகால் அவர் அரசரினும் மிக்கசிறப்புந்தலைமையும்வாய்ந்து அவரையுந் தஞ்சொல்வழி நிறுத்து அடக்கியாள்பவராய், அங்ஙனமாயினும் அவ்விருதிறத்தாருந் தம்முள் அளவளாவி வாழ்தலிற் குறைஏதும் இலராய்ப் புகழ்மேம்பட்டு விளங்கல் எவரும் அறிந்ததொன்றன்றோ? பழையதமிழ்வேந்தர்கள் தங்கீழ் வாழுங் குடிமக்கள் நலத்தையே முழுதும் வேண்டி நின்றமைக்கு அவர் வஞ்சினங்கூறுங்காற் "குடிபழி தூற்றுங்கோலேனாகுக!" என்று கூவிக்கூறினமையே சான்றாம். இனிக் குடிமக்களும், அக்குடிமக்களிற்சிறந்த புலவர்களுந் தம்மரசனை அங்ஙனமே தம்முயிராய்க்கொண்டு ஒழுகினமையும் அஞ்ஞான்றைப் புலவர்கள் பாடிய செய்யுட்களால் அறியப்பெறுகின்றேம். இதற்கு, **மோசிகீரனார்** என்னும் நல்லிசைப்புலவர் நுவன்ற,

"நெல்லும் உயிர் அன்றே நீரும்உயிர் அன்றே,
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்;
அதனால், யான் உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே" (புறநானூறு, ௧௮௬) என்னும் அரியசெய்யுளே சான்றாம். 'இந்த உலகத்

தார்க்கு நெல்லும் நீரும் உயிர் ஆகா, அரசனே உயிராகும்; அதுபோலக், கல்வியறிவிற்சான்ற என்னோரன்ன புலவர் தனக்கு உயிராதலை அறிதல் அரசற்குக் கடமையாகும்' என்னும் அதன்பொருள் எத்துணை நுட்பமாகவும் அஞ்சா அறநெஞ்சத்துடனும் எடுத்துரைக்கப்பட்டிருக்கின்றது! மன்னன் உலகத்தார்க்கு உயிர் என்பதை எல்லாரும் அறிவர் கல்வியறிவின் மிக்க புலவர் அம்மன்னற்கு உயிராம் உண்மையினையறிவார் எவர்? அறிந்தாலும் அதனை எல்லாரும் அறியக்கூறுவார் எவர்? கல்விவல்லபுலவர்களை இல்லாத நாடும் அரசுங் கானகத்தையும் அதில் உலவுங் கோளரியையுமே ஒக்கும். ஆதலால், அறியாமை இருளை அகற்றி அறிவொளிபரப்பி அன்பையும் அறத்தையும் இன்பத்தையும் பெருகச்செய்யும் புலவர் குழுவினையுடையநாடே விண்ணவர் உறையும் வானநாட்டினை யொப்பதாகும். இவ்வுண்மையினை யுணரவல்லார்க்கு, அரசியலுக்கு உயிராவார் புலவர்களேயென்ற மோசிகீரனாரது செய்யுள்நுட்பம் விளங்காதொழியாதென்க.

குடிமக்கட்குரிய கடமை

இனித், தமது கடமையினை நன்குணர்ந்து செங்கோல் ஓச்சும் அரசரது அரசியலும், உழுதொழிலை இனிதுநடாத்தி அதனால்வரும் விளைபொருள்களை எல்லார்க்கும் பகுத்துக் கொடுக்கும் வேளாண்வாழ்க்கைத் தாளாளரையே அச்சாணியாகக்கொண்டு ஊர்ந்துசெல்லாநிற்கின்றது இது,

"பலகுடைநீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழலவர்" என்றும்,
"உழுவார் உலகத்தார்க்காணி" என்றும்

ஆசிரியர் திருவள்ளுவநாயனார் கூறுமாற்றால் அறியப்படும். இன்னும் ஓர் அரசின்கீழ்வாழும் பலதிறத்தரான குடிமக்கள் எல்லாரிலும், உழவும்வாணிகமும் மடியாது நடாத்தும் வேளாளக்குடிகளென்னும் அச்சுமரத்தின் இருபுறத்தும் உள்ள அவ்வுழவும் வாணிகமுமாகிய ஈருருளின் மேல்நின்றே அரசியலாகிய ஒருபெருந்தேர் ஓடுகின்றதென்றும் உரைக்கலாம். இங்ஙனம் அரசியலுக்கு இன்றியமையாச் சிறப்பினரான வேளாண்மக்களின் வாழ்க்கை இனிது நடைபெறவே, அரசியல்

இனிதுநடைபெறுவதோடு, அவ்வரசின்கீழ் வாழும் ஏனைக் குடிமக்களின் வாழ்க்கையும் இனிது நடைபெறுமென்பது தானே போதரும். அஞ்ஞான்றிருந்த வேளாண்மக்கள் தாம் உலகியலொழுக்கத்திற்கு முதல்வேராயிருப்பதனை நன்குணர்ந்து தங்கடமையின் வழாதொழுகினமையாற்றான், அவ்வுலகியலொழுக்கஞ் செவ்வனே நடைபெறலாயிற்றென்று, பாண்டிமன்னனும் நல்லிசைப் புலவனுமாகிய **இளம்பெருவழுதி** என்பான்,

"உண்டால் அம்மஇவ் வுலகம், இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே, முனிவிலர்,
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்,
புகழெனின் உயிருங் கொடுக்குவர், பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர், அயர்விலர்,
அன்னமாட்சி அனையராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே" (புறநானூறு, ௧௮௨)

என்று நன்குவிளக்கிச் சொல்லிய செய்யுள் நினைவிற் பதிக்கற்பாலதாகும். இச்செய்யுளை உரையாசிரியர் **இளம்பூரணர்**, தொல்காப்பியப் புறத்திணையியல் ௧௭-ஆஞ்சூத்திரத்திற்கு மேற்கோளாக எடுத்துக்காட்டி "நோன்றாட்பிறர்க்கென முயலுநர் வணிகவேளாளர்" என்றதூஉம் மறவற்க. விருந்துவந்தவர் தம்மினத்தவர் அல்லாக்கால், அவர் எத்துணைப் பசியோடிருப்பினும் அவரைப் புறத்தே வருந்தியிருக்கவைத்துக் கதவடைத்துத், தாம் அகத்தே தம்மவரோடிருந்து விலாப்புடைக்கத்தின்று, தாம் தின்றுமிகுந்ததைப் பின்னர் அவ்விருந்தினர்க்கு இடும் ஆரியப்பார்ப்பனர்தம் தந்நலவொழுக்கம், பண்டை நம் தமிழாசிரியர் மாட்டும் அவரது ஆணைவழியொழுகிய உயர்குடிப் பிறப்பினரான பண்டை நம் வேளாண்மாந்தர் மாட்டும் இல்லாமை, "இந்திரர் அமிழ்தம் இயைவதாயினும் இனிதெனத், தமியர் உண்டலும் இலர்" என இச்செய்யுள் முதலிற் சொல்லப்பட்டமையால் நன்கறியக்கிடக்கின்றது. வேற்றுமையின்றி மக்கள் ஒருவரோடொருவர் அன்

பினால் அளவளாவி வாழும் நேயவாழ்க்கை, உணவருந்துங்கால் அவர் ஒருங்கிருந்து மகிழும்வழி யல்லது உண்டாகாமையானும், ஒருவர் தம்மை உயர்வாகவும் விருந்துவந்த பிறரைத் தாழ்வாகவும் நினைந்து அவரோடருகிருந்து உணவெடுக்க ஒருப்படாது அவரை யொதுக்கித் தாம் தம்மினத்தவரொடு மட்டுந் தனியிருந்து அயிலுங்கால் அவர்க்கும் அப்பிறர்க்கும் மனவொற்றுமை எவ்வாற்றானும் உளதாகாமையானும் அத்தகைய வேற்றுமையுணர்ச்சி யுடையார் மிகுந்துள்ள நாடு சிறந்த நேயவாழ்க்கைக்குரிய நாடாகாமையினை நன்கு வற்புறுத்தவே அதன் ஆசிரியனான அரசன், தமியர் உண்ணுமக்கள் தங்காலத்து மிக்கிருந்து உலகவாழ்க்கையினை அன்பினால் நடைபெறச்செய்த முதற்பெருஞ் செயலினை முதற்கட் கூறுவானாயினன். இதனால், அஞ்ஞான்றிருந்த அரசர்களும் அவரது செங்கோலரசின்கீழ் வைகிய வேளாண்மாந்தர்களும், உணவருந்துங்கால் எவரோடும் வேற்றுமையின்றி அன்பினால் அளவளாவி மகிழ்ந்திருந்தருந்திய நேயவாழ்க்கையின் முதன்மையுஞ் சிறப்பும் நன்கு புலனாகாநிற்கின்றன. அங்ஙனம் அவர் எல்லாரோடும் அளவளாவியது எதனாலென்றால், தம்மவரல்லாரை வெறுக்கும் ஆரியப்பார்ப்பனர்போலாது, அவர் எவரையும் வெறாது ஒழுகிய பெருங்குணத்தினாலேயாம் என்பது தெரிப்பான் "முனிவு இலர்" என அவர்க்குரிய நல்லியல்பினை அரசன் அதன்பின் எடுத்துக்கூறினான். இனி, அஞ்ஞான்றை வேளாண்மாந்தர் பிறர் துயருறக்கண்டால், அது தீர்க்கும் வரையில் தாம் கண்துயிலாரென்பதும், மெய்ப்புகழ்விளைக்கும் ஓர் அரும்பெருஞ் செயலினைத் தமது உயிர்கொடுத்தாயினும் முடிப்பரென்பதும், பிறிதொருசெயல் பழியைத்தருவதாயின் உலகத்தையே அது செய்தற்குக் கூலியாகக் கொடுத்தாலும் அவரதனைச் செய்யாரென்பதும், அதனால் அவர் மனக்கவலையே இல்லாத பேரின்பவாழ்க்கையில் வாழ்ந்திருந்தனரென்பதும், இங்ஙனமெல்லாந் தமக்கென்றே வாழாது பிறர்க்கென்றே வாழ்ந்த விழுமிய முயற்சியினரான வேளாண்மக்கள் உண்மையினாலேதான் இவ்வுலகம் இனிது நடவாநின்றதென்பதும் பாண்டிமன்னன் இளம்பெரு வழுதியினால் மேலைச்செய்யு

ளில் எத்துணை அழகியவாக உருக்கமாக அடுத்தடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன!

இவ்வாறு அப்பண்டைநாள் வேளாண்மக்கள் குணமுஞ் செயலும் மேதக்கனவாயிருக்க, இஞ்ஞான்றை வேளாளர் இயற்கையுஞ் செய்கையும் எத்துணை மாறுபட்டனவா யிருக்கின்றன வென்பதையுஞ் சிறிது ஓர்ந்துபார்மின்கள்! "நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகும் மாந்தர்க்கு. இனத்தியல்பதாகும் அறிவு" என்று தெய்வத்திருவள்ளுவர் அருளிச்செய்தபடி, இந்நாள் உள்ள சைவவேளாளர்கள் தம்மை முகத்தெதிரே 'வைசியர்' 'க்ஷத்திரியர்' என்றுந் தம்மைக் காணாவிடத்தே 'சூத்திரர்' என்றும் இரண்டகமாய்ப் பேசித் தமது பொருளைப் பலவகையாற் கவர்ந்துவரும் ஆரியப்பார்ப்பனர் சேர்க்கையால், தாமும் இப்போது தம்மவரல்லாதார் தம்மில்லத்திற்கு விருந்தினராய் வந்தால் அவரைப் புறப்பேவைத்துத், தாம் தம்மவரொடுமட்டும் உள்ளிருந்துணவருந்தித், தாம் உண்டு மிகுந்ததைப் பின்னர் அவர்க்கு இடுகின்றனர். வேளாளராகிய தம்மைச், 'சூத்திரர்' எனப் பார்ப்பனர் வாய்கூசாது சொல்லுதலைக் கேட்டும், அதற்கு மருந்து தேடாது அதனை ஏற்றுக்கொள்ளும் அவர், தமக்குப் பலவகையிற் பயன்படும் ஏனை இனத்தவர்களைத் தாமும் 'சூத்திரர்' என இழித்துரைப்பது எவ்வளவு நகைப்புக்கிடமாய் இருக்கின்றது! இவ்வேளாண்மக்களிற் பலர் தாம் பார்ப்பன வழக்கத்தைப் பின்பற்றி, இறந்துபோன தம் முன்னோர்க்கு வழிபாடு ஆற்றியபின், தம்மவரோடிருந்துண்டு கழித்த மிச்ச உணவையும் ஏழையெளியவர்க்குக் கொடுத்தால் தமக்குத் தீட்டுண்டாமெனப் பிழைபடக்கருதி, அதனை நிலத்தே வெட்டிய பள்ளத்திற் கொட்டிப் புதைத்து விடுகின்றார்கள்! தமக்குரிய உழவுதொழிலைத் தாம் செய்யாமல் தம்மகத்தே அவர் படிந்து களித்திருக்கத், தமக்காக மழையிலும் பனியிலும் வெயிலிலும் அல்லும் பகலும் பாடுபட்டுப் பயிர் செய்து அவ்வேழைகள் விளைத்துக் கொடுத்த பெருஞ்சோற்றை அவ்வேளாளர் தாம் நன்றாக விழுங்கியபின்னும், எஞ்சிய சிறு மிச்சிற்சோற்றையாதல் அவ்வேழைமக்கட்கு வயிறு குளிரக் கொடுத்தால் அவர் தீட்டுப்பட்டு மாண்டுபோய்விடுவர்!

ஐயோ! இவ்வாறு **திருக்குறள்** முதலான எந்தப் பழைய தெய்வத் தமிழ்நூலிலாவது சொல்லப்பட்டிருக்கின்றதா? வேளாளர் முதலான தமிழ்மக்கட்குச் சிறிதும் இசையாத வடமொழி நூல்களிற் பார்ப்பனர் தம்மையே எவ்வாற்றானும் உயர்த்திவைத்து, ஏனையோரையெல்லாம் முற்றும் இழித்துவைத்து எழுதிய பொல்லா உரைகளை நம்பி, இஞ்ஞான்றை நம் தமிழ்மக்கள் இங்ஙனம் ஏமாந்து இழிபுபடுதலுந், தமக்குள் ஒற்றுமையின்றிச் சீர்குலைதலுந் தெய்வத்திற்கு அடுக்குமா? தம்மில்லத்திற்கு விருந்துவந்தவரும் பிறரும் எவராயிருப்பினும் அவரை முன் ஊட்டித் தாம் பின் உண்ணுதலன்றோ பண்டை நம் வேளாண்மாந்தர்க்குரிய விழுமிய ஒழுகலாறாக, மேலே, நல்லிசைப்புலவனும் அரசனும் ஆகிய இளம்பெருவழுதி கட்டுறுத்துச் சொல்லியிருக்கின்றான்? ஆசிரியன் தெய்வத்திருவள்ளுவனும்,

“விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று” என்றருளிச்செய்திருத்தலை இஞ்ஞான்றை வேளாளர் அறிந்திருந்தால் இங்ஙனஞ்செய்து ஏதம் உறுவார்களா? அது கிடக்க.

இனிப், பழைய தமிழ்க்குடிமக்கள் தாஞ் செய்துபோந்த பலவேறு தொழில்களாற் பலவேறு இனத்தவர்களாய்ப் பாகுபாடுற்று நின்றார்களாயினும், அதுபற்றி ஒருவர் பிறர் ஒருவர் செய்யுந்தொழிலையும் அத்தொழில் செய்வாரையும் இகழ்தல் இலராய்ப், பொதுக்கூட்டங்களில் எல்லாருமாய் ஏதொரு வேற்றுமையும் இன்றி ஒருங்கு அளவளாவி அன்பினால் இன்புற்று வாழ்ந்தது எதனாலென்றால், மக்களெல்லாரும் வாழ்க்கை நிலையில் ஓரியல்பினரே யாதலை அவர் நன்குணர்ந்து தெளிந்தமையினாலேயாம். எத்துணைப் பெருஞ்செல்வத்தில் இருப்பவராயினுஞ், செல்வமின்றி அன்றாடம் உழைத்துப் பெற்ற கூலிகொண்டு வயிறுபிழைப்பவராயினும், எல்லாரும் ஒருநாளைக்கு உண்பது ஒருபடி அடிசிலையன்றி அதற்குமேல் இல்லையே! அவரெல்லாரும் உடுப்பன மேலாடை கீழாடை இரண்டேயன்றி அவற்றிற்குமேல் இல்லையே! ஆதலால், மக்கள் செல்வத்தால் உயர்தலும் அஃதின்மையாற் றாழ்தலும் எல்

லாம் வெறுஞ்சொல்லே! ஆகவே, பழந்தமிழ்மக்கள் வாழ்க்கையின் ஒத்த நிலைமையினை நன்குணர்ந்துபார்த்து, எவரையும் உயர்வுதாழ்வாக நினையாமல் எல்லாரையும் ஒத்த தன்மையினராகவே நினைந்தொழுகினர்; ஓரோவொருகால் அவர் அந்நினைவிற்பிறழ்ந்து இறுமாப்புறக்கண்டால், அவரிடையிருந்த நல்லிசைப்புலவர்கள் அவர்க்கு உடனே அவ்வுண்மையினை அறிவுறுத்தி அவரைத்திருத்தி ஒருமையுறச் செய்துவந்தனர். இதற்கு, **மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார்** பாடிய ஓர் அரியசெய்யுள் சான்றாய் நின்று ஒளிர்கின்றது; அதுவருமாறு:—

“தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி
வெண்குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்,
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா ஒருவற்கும்,
உண்பது நாழி, உடுப்பவை இரண்டே,
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே,
செல்வத் துப் பயனே ஈதல்,
துய்ப்பேம் எனினே தப்புந பலவே” (புறநானூறு, ௧௮௯).

‘உலகமெல்லாம் ஒரு வெண்குடை நீழலில் வைத்து அரசு செலுத்தும் வேந்தனேயானாலும், தான் பயிர்செய்த ஒருதினைப் புனத்தின் விளைவைக் காட்டியானைகளுங் காட்டுப்பன்றிகளும் புகுந்து அழித்துவிடாமல் இரவும் பகலுங் கண்ணுறக்கங் கொள்ளானாய் அதனைப் பாதுகாக்கும் ஒரு கானவனேயானாலும் எல்லாரும் ஒருநாளைக்குக் கொள்ளும் உணவு ஒருநாழியேயாகும்; அவர் உடுப்பன இரண்டு ஆடைகளேயாகும்; இவையேயன்றிப் பிறப்பும் இறப்பும் நோயுங் கவலையுந் துன்பமும் இன்பமும் எல்லாம் எல்லார்க்கும் உள்ளனவேயாகும்; ஆதலாற், செல்வத்தாற் பெற்றபயன் ஈகை அறங்களைச் செய்தலே யாகும்; செல்வத்தைப் பிறர்க்குக் கொடாமல் யாமே நுகர்வமெனில், அது கைகூடாமல் தவறுதல் பலவாகக் காணப்படுகின்றன’ என்னும் இச்செய்யுட்பொருள் மக்கள் வாழ்க்கையின் ஒத்ததன்மையினைப் பசுமரத்தாணி அறைந்தாற்போல் எவ்வளவு திறமாகத்தேற்றுகின்றது! இத்துணைச்சிறந்த அரிய

அறிவுரையினை ஆரிய மிருதிநூல்களிற் காண்டல் இயலுமோ? அம்மிருதிநூல்கள் பிறப்பளவில் மக்களுள் உயர்வு தாழ்வு வகுத்துக்கொண்டு, அவ்வகுப்புக்கேற்ற பயன் இல்லாப் புறவினைகளைச் செய்யுமாறு நுவன்று செல்லக்காண்கின்றனமேயன்றி, அறிவாலும், அன்பாலும், அறவினையாலுஞ் சிறந்தாரைச் சிறந்தெடுத்துப்பாராட்டிப், பிறப்பளவில் மக்களெல்லாரும் ஒரு தன்மையினரே யென அவை அறிவுறுத்தக்காண்கிலேம். அதனால், அந்நூல்கள் அவைதம்மை ஆக்கிய பார்ப்பனக் குருவினராலன்றி, ஏனை எல்லாமக்களாலும் எல்லாச் சமயத்தவராலுந் தழுவப்படாமலே ஒழிந்தன. மற்று, மேற்காட்டிய உண்மை அறவுரை போல்வனவே பொதிந்துள்ள **திருக்குறள், நாலடியார்** போன்ற தமிழ் அறநூல்களோ, தமிழ்மக்களேயன்றி, உலகம் எங்கணும் உள்ள எல்லாமக்களும் எல்லாச்சமயத்தவரும் விரும்பித் தலைமீதேற்றுப் போற்றும் மேம்பாடு வாய்ந்தனவாய்த் திகழ்கின்றன. அது நிற்க.

இனி, மேலே விளக்கியவாறு அந்நாளிருந்த தமிழ்ப் பெருங்குடிகள் தாம் பிறப்பளவில் ஒத்த தன்மையினராதலையுணர்ந்து, தம்முள் அன்பினால் அளவளாவுங் கடமையில் வழுவாதொழுகினமையாலும், ஒரோவொருகால் அவர் தம்மிற் சிலர் அக்கடமையின் வழுவக்கண்டால் அவர்காலத்திருந்த அறிவான்மிக்கநல்லிசைப்புலவராகிய சான்றோர் சிறிதும் அஞ்சாது விரைந்துசென்று அவர்க்கு அக்கடமையினை யெடுத்து இடித்துச்சொல்லி அவரைத் திருத்திவந்தமையாலும் அஞ்ஞான்றைக் குடிமக்கள் வாழ்க்கையும், அதற்குயிராய் உள்ள அரசவாழ்க்கையும் அன்பும் அறமும் நிரம்பித், தூயதீம்பால் பெய்த தூய பசும்பொற்குடமேயெனப் பொலிந்தன. அவ்விருதிறத்தார் வாழ்க்கைக்கும் இன்றியமையாத் துணையாய் நின்ற புலவர்வாழ்க்கையும், அத்தீம்பாற் பொலன்குடத்தைத் தமது திருக்கையிலேந்திய திருமாலேயெனத் தெய்வத்தன்மை மிக்கு விளங்கிற்று. அஃது அன்னதாதலைச் சிறிது விளக்குதும்.

புலவர்தம் இனிய இல்லறவாழ்க்கை

முன்னே எடுத்துக் காட்டிய **கோப்பெருஞ்சோழன்** என்னும் அரசர்பெருமான் தன்னரசுதுறந்து உயிர்நீத்தற்கு

வடக்குநோக்கி யிருந்தவழி, அவற்கு இன்னுயிர் நண்பரான **பிசிராந்தையார்** என்னும் புலவர்பெருமான் அவனைப்பிரிந்து உயிர்வாழமாட்டாராய்த் தாமும் அவனோடு ஒருங்கு உயிர்நீத்தற்கு அவனிருந்த இடமேபோந்தனர். அப்போது அவ்வரசனோடு உடனிருந்த சான்றோர்கள், பிசிராந்தையார் ஆண்டில் முதிர்ந்தும் உருவத்தில் இளையராய் விளங்குதல் கண்டு வியந்து, "கேட்குங்காலம் பலவாலோ, நரை நுமக்கு இல்லையாலோ?" என அவரைநோக்கி வினவ, அவர்,

"யாண்டு பலஆக நரைஇல ஆகுதல்
யாங்காகிய ரென வினவுதிராயின்,
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்,
யான் கண்டனையர் என் இளையரும், வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும், அதன்தலை
ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர் யான்வாழும் ஊரே" (புறநானூறு, ௧௯௧)

என்னும் அருமருந்தன்ன செய்யுளால் அச்சான்றோர்க்கு விடைகூறினர். தாம் ஆண்டில் முதிர்ந்தும் நரையிலா இளையவுருவத்தொடு தாம் விளங்குதற்கு ஏற்றகாரணங்களைக் கூறுவான் புகுந்த ஆசிரியர் பிசிராந்தையார், தம்மனைவி மக்கள் எல்லா நற்குணங்களினாலும் நிரம்பினராயிருத்தலை முதற்கண் எடுத்துரைக்கும்நுட்பம் பெரிதும் நினைவுகூரற்பாலது. ஓராண்மகன் தானுந் தன் குடும்பத்தவரும் இனிதுவாழ்தற்கு இன்றியமையாது வேண்டும்பொருள் கடைக்கூட்டுதற்பொருட்டு, நாள்முழுதும் வெளியேசென்று முயலும்வழித், தனக்குத் தலைவராயினாரோடுந், தன்னோடு உடன்முயல்வாரோடும் பழகும்நேரம் மிகச்சிறிதேயாகும்; அங்ஙனம் பழகுங்காலும் அவன் தன்னுள்ளத்தைத் திறந்துவைத்து அவரொடு பழகுதல் இயலாது; அல்லதூஉந், தன் தலைவர்களுந் தன்னோடு உடன்முயல்வாருந் தன்னொடு மாறுபட்டவராய் இருந்தால் அவரால் அவன் படுந்துன்பம் அளவிடப்படாததாய் இருக்கும். இவ்வாறெல்லாம் வெளியே பலவகை அல்லல் உழந்து, மாலைப்பொழுதில் அயர்ந்து அவாவுடன் தன் இல்லத்திற்குத் திரும்பும் அவ்வாடவன், தன் அழகிய இனிய கற்பிற்சிறந்த அறிவுடைமனை

யாளால் நகையரும்பு குளிர்முகத்தோடு அன்புடன் எதிரேற் கப்படுவனாயின், அவன் தான் வெளியேபட்ட துன்பங்களெல் லாம் மறந்து எத்துணை ஆறுதலுங் களிப்பும் மிக்கவனாய்த் தன் இல்லத்தின் உள்ளேசென்று வைகுவன்! இனி, அவ்வாறின்றி அவள் தன் கணவனைக் கண்டவுடன் தன் கடுகடுத்த முகத்தா லும் வெடுவெடுத்த சொல்லாலும் அருவருத்த நடையாலும் அவனைப் பேய்போல் வாட்டி வருந்துந் தீயஇயற்கை யுடைய ளாயின், முன்னமே வெளியில் அல்லற்பட்டுவந்த அவன் தன் வீட்டின் அகத்தும் அங்ஙனந்துன்புற்று, அதனாற் கவலையும் நோயுங்கொண்டு செந்நீர் நஞ்சாகி இளமையிலேயே மூத்துப் போவன்; மூத்துவிரைவிலும் மாண்டுபோவன். இவ்வுண்மை யுணர்ந்தன்றே **ஒளவையார்**,

"இல்லாள், வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய்விடும்" என்றுந், **திருவள்ளுவர்**,
"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்" என்றும்
"உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந்தற்று" என்றும் அருளிச்செய்தனர்.

எனவே, ஆடவரும் மகளிரும் முதுமை எய்தாமல் நீண்டகா லம் இளமைச்செவ்வியுடன் இனிது வாழ்தற்கு, அவர் தம்மில் எஞ்ஞான்றும் அன்பினால் அகங்கெழுமிக் குளிர்ந்தமுகனும் இழைந்தசொல்லுங் குழைந்தநடையும் வாய்ந்து மாறின்றி ஒழு குதலேயாம் என்பது போதரும்.

அஞ்ஞான்றிருந்த நந் தமிழ்மேன்மக்கள், அன்புக்கும் அருளுக்கும் அறத்திற்குமே தலைமைதந்து, சாதிக்கட்டுப்பாடு சமயக்கட்டுப்பாடுகளை அவற்றின் தலைமைக் கீழ் அடக்கி வைத்து வாழ்க்கை செலுத்திவந்தமையால், ஆடவர் தமக்கேற்ற மகளிரையும், மகளிர் தமக்கேற்ற ஆடவரையுங் காதலன்பின் வழிச்சென்று மணக்கலாயினர். அங்ஙனம் இருபாலருள்ள மும் அன்பினாற் குழைந்துருகி ஒருமையுற்றபின், அவரது வாழ்க்கையிற் கவலையாதல் துன்பமாதல் நுழைதற்குச் சிறிதே னும் இடன் உண்டாமோ? அவ்வாறு மாறிலாமகிழ்ச்சியில் மலர்ந்த அவர்தந்திருவுருவம் என்றும்மூவாது இளமையாகவே

அவன்றன் குருவினிடமிருந்து வந்தாற்போற் போலிக் கடிதங்கள்வந்தன. அவைகளை அவன் தன் குடிமக்க ளின் முன்னிலையிற் படிக்கும்படி செய்வித்துத், தன்குரு கிரிசெலாளைத் தான் நீக்கிவிட்டு வேறொரு நங்கையை மணந்துகொள்ள ஒருப்பட்டு விடைகொடுத்ததனை அவர் களெல்லார்க்கும் அறிவித்தனன். அதன்பின் உடனே அவன் கிரிசெலாளைத் தன் குடிமக்களின் எதிரே வரு வித்துவைத்து அவளைநோக்கிக் கூறுவான்: "பெண்ணே, என் குருவினிடமிருந்து வந்த விடையானது, நின்னை விலக்கிவிட்டு, யான் வேறொருபெண்ணை மணந்துகொள் ளும்படி கற்பிக்கின்றது. என் முன்னோர்களெல்லாரும் உயர்குடிப்பிறப்பினராயும் இந்நாட்டுக்குத் தலைவர்களா யும் இருந்தமையாலும், நீ ஓர் ஏழைக்குடிமகளாய் இருப் பதனாலும், யான் நின்னை மணந்துகொண்டதனால் என் முன்னோர் பிறப்பும் என் பிறப்பும் இழிபடைதலாலும், இனி யான் நின்னை என் மனைவியாக வைத்திருக்கவிருப்ப மில்லை; ஆதலால், நீ கொணர்ந்த பரிசத்தொடு நின்னைத் திரும்ப நின் தகப்பன் வீட்டுக்குப் போக்கிவிட்டு, என் உயர்குடிப்பிறப்புக்கு ஏற்றவளாயும், அதனால் என்குடி மக்கள் உள்ளத்திற்கு இசைந்தவளாயுங் காணப்படும் மற்றொருமாதை யான் மனையாளாக மணந்துகொள்ள ஏற்பாடு செய்துகொண்டிருக்கின்றேன்."

இச்சொற்களைக்கேட்ட கிரிசெலாள், தன் கண் களிற்றதும்பியநீரைப்பெருவருத்தத்தொடுதடைசெய்து கொண்டு, மற்றைப்பெண்மக்களின் இயற்கைக்கு வேறா னவளாய், "மாட்சிமிக்க அரசே, யான் அத்துணைப்பகுத் தறிவு வாயாதவள் அல்லேன்; எனது தாழ்ந்த இழிந்த குடிப்பிறப்பின் நிலைமையானது, தங்களது உயர்ந்த சிறந்த குடிப்பிறப்பின் நிலைமைக்கு எவ்வாற்றானும் ஒவ்வாத தென்பதை யான் என்றும் ஒப்புக்கொண்டவளே. யான் தங்களொடு கூடியிருக்கும்பேறு இறைவனது பேரருளா

னுந் தங்களது தண்ணளியாலும் எனக்குக் கிடைத்ததே
யல்லாமல், என்பாலுள்ள எந்த நலத்தினாலாவது கிடைத்
தது அன்று என்பதையும் யான் என்றும் ஒப்புக்கொண்
டவளே. ஆதலால், தங்களால் வந்த இப்பேற்றைத் தாங்
கள் திரும்ப வாங்கிக்கொள்ளுதற்குத் தங்கள் திருவுளம்
இப்போது எண்ணுதலால், அதனை யானுந் தங்கட்கு
மகிழ்வுடன் திருப்பிவிட வேண்டியவளாகவே இருக்கின்
றேன். என்னை மணந்துகொள்ளுகையில் தாங்கள் என்
விரலில் இட்ட இக்கணையாழியை இதோ தாழ்மையா
கத் தங்கட்குச் சேர்ப்பிக்கின்றேன். இன்னும், யான்
கொணர்ந்த மணப்பரிசத்தை யான் திரும்ப எடுத்துச்
செல்லும்படி தாங்கள் எனக்குக் கட்டளையிடுகின்றீர்
கள். ஆனால், அவ்வாறு எனக்குத் திரும்பிக்கொடுக்க
வேண்டுவ தொன்றுமில்லையே. ஏனென்றால், என்னைத்
தாங்கள் கொண்டுவந்தபோது யான் அணிந்திருந்த என்
னுடைய எளிய ஆடைகளை முற்றுங் களைவித்தன்றோ
என்னைக் கொண்டுவந்தீர்கள்? தங்களுக்கு இரண்டு
மகவுகளை ஈன்ற இவ்வுடலம் அவ்வெளிய ஆடைகளையே
அணிந்து செல்லல்வேண்டுமெனத் தாங்கள் எண்ணி
னால், இங்கிருந்து அங்ஙனமே செல்வேன். குற்றமில்
லாக் கன்னிமையொடுவந்த எனக்குத் திருமணக்காலத்
தில் அணிவித்திருந்த ஆடைகளுள் ஒன்றை எனது
மானத்தை மறைக்குமளவுக்குத் தாங்கள் உளம் இரங்
கிக் கொடுத்தால் அதனையே எனது திருமணப்பரிசமா
கக் கருதிக்கொண்டு இவ்விடத்தைவிட்டுச் செல்வேன்.''
எனமொழிந்தனள்.

அம்மன்னனோ, தன் மனையாள் விளம்பிய இம்
மொழிகளைச் செவிமடுத்துத், தன் நெஞ்சம் நீராய் உரு
கத் தன் கண்களும் அந்நீரை உகுக்கும் நிலையினவாகத்,
தன்னுளம் நெகிழ்ந்தும், அந்நெகிழ்ச்சியினைக் காட்டா
னாய்ச், சீற்றமுஞ் சினமுங் கொண்டான்போல் எழுந்து

நின்று, ''இவட்கொரு சிற்றாடைகொடுத்து, இவளைப்
போகவிடுமின்கள்!'' எனக் கரைந்தான். அப்போதங்
கிருந்தவரெல்லாரும், பதின்மூன்றாண்டுகள் ஓர் அரசற்கு
மனையாளாயிருந்த ஓர் அரசி ஓரேழைச் சிற்றாடை
யணிந்து வெளிச்சென்றாள் என ஒரு சிறுசொற் பரவா
மைப்பொருட்டு நல்லதொரு பேராடை கொடுங்கள்
என அவனைமிக இரந்துவேண்டியும், அவன் அதற்கு
இசைந்திலன். மற்று, அவ்வரசியோ, அடிக்குத் தொடு
தோல் இல்லாமலுந், தலைக்கு முடியில்லாமலுந், தன் மே
லே ஒரு மாராப்புக்கூட இல்லாமலுந், தன் அரையுடம்பு
தெரியச் சிற்றாடை யுடுத்தவளாய்த் தன்னைக் கண்டவ
ரெல்லாம் ஆற்றாது புலம்பி அழ, வழிநடந்து சென்று
தன் தந்தையின் இல்லிற் சேர்ந்தாள்.

அவடந்தையாகிய அந்நல்ல குடியானவனோ, தன்
புதல்வியை அவ்வரசன் நீண்டகாலந் தன் மனையாளாக
வைத்திரானென்றும், இப்போது நிகழ்ந்தபடி அவள் தன்
பாற்றிரும்பிவந்து சேர்தலே நேருமென்றும், ஒவ்வொரு
நாளும் எதிர்பார்த்திருந்தவனாதலால், அரசன் அவளை
மணந்துகொள்ளுதற்கென்று ஒழுங்குசெய்த அந்நாளில்
அவளுடம்பினின்றுங் களைவித்தெறிந்த எளிய ஆடை
களைக் கருத்தாய்ப் பாதுகாத்து வைத்திருந்தான். ஆகவே,
அவன் இப்போது அவைகளை யெடுத்துத் தன்மகள் கை
யிற் கொடுத்தான்; கிரிசெலாளும் அவைகளைவாங்கி
யுடுத்துக்கொண்டு, பழமைபோல் தன் தந்தையின் இல்
லப்பணிகளைச் செய்தல்மேற்கொண்டு, ஊழ்வினையானது
தனக்குவிளைத்த அல்லல்களை யெல்லாம் பெரியதொரு
மனத்திட்பத்தொடு பொறுத்துக்கொண்டு தன் வாணா
ளைக் கழிப்பாளாயினள்.

இங்ஙனஞ் சில வைகல் கழிய, அவ்வரசனோ தனக்
கிசைந்ததாகத் தோன்றிய ஒருநாளில், தான் ஓர் அரசன்
மகளை மணஞ்செய்து கொள்ளப்போவதாகத் தன் குடி

மக்கட்கு அறிவித்து, அத்திருமணவிழவை மிகவுஞ்சிறப்பாக நடைபெறுவித்தற்கு வேண்டுவனவெல்லாஞ் செய்யும்படி கட்டளையிட்டான். அதன்பிற், கிரிசெலாளையும் அவடன்தந்தையின் இல்லத்தினின்றும் வருவித்து, அவளைநோக்கி, "மாதே யான் இப்போது மணந்துகொள்ளுதற்கென்று தெரிந்தெடுத்திருக்கும் நங்கை இன்னுஞ் சிலநாளில் இங்கே வந்துசேர்வள். அவள் முதன்முதல் வரும்போதே அவளைச் சிறப்பாக வரவேற்றுக் கொண்டாட விழைகின்றேன். இவ்வரண்மனைக்கண் உள்ள மாடங்கள் மண்டபங்கள் மாளிகைகள் கூடங்கள் அறைகள் முதலானவைகளை யெல்லாம் ஏற்றபடி ஒப்பனைசெய்து, அத்துணைச்சிறந்த கொண்டாட்டுக்கு ஒத்தவகையாக வேண்டும் பண்டங்களைத் தொகுத்து அவையிற்றை அழகாக அமைத்து வைக்கவல்ல ஒருபெண்பால் இங்கில்லையென்பதை நீ நன்கறிவாய். ஏனையெல்லாரையும்விட நீ இவ்வரண்மனைக்க ணுள்ள எல்லாப்பகுதிகளையும் நுகர்பொருள்களையும் பண்டம்பாடிகளையுஞ் செவ்வையாகத் தெரிவையாதலால் நின்னையிங்கு அழைப்பித்தேன். நினக்குத் தோன்றுமாறு இங்குள்ளவைகளை யெல்லாம் ஒழுங்குற அமைப்பாயாக! நினக்கு வேண்டிய நங்கைமார்களையுஞ் செல்வப்பெருமாட்டிகளையும் வருவித்து, நீயே இவ்வரண்மனைக்குத் தலைவியாக இருக்கும்முறையி லிருந்து அவர்களை விருந்தோம்புவாயாக! திருமணம் முடிந்தவுடனே நீ நின் தந்தையினிடந் திரும்பி ஏகலாம்." என்றனன்.

இச்சொற்கள், ஏழைமையில் மேதகவுவாய்ந்து பொறுமைமிக்க கிரிசெலாளின் நெஞ்சத்திற் கூரியவேலை நுழைத்தாற்போற் பாய்ந்தனவேனுந், தான் முன்னிருந்த செல்வவாழ்க்கையின் உயர்வு அவடன் நினைவைவிட்டு எளிதாகநழுவிப்போயதேனும், அவள் தான் அவ்வரசன் மேல் வைத்திருந்த இணையற்றகாதலன்பை மறக்காம

டாளாய், "என் அருட்பெருமானே, தங்கட்கு வேண்டியதோர் ஊழியத்தை அடியேன் என் முழுமனத்துடன் விரைந்து செய்யக் காத்திருக்கின்றேன்" எனப் பகர்ந்தனள். அவள் ஒரு சிற்றுடையுடன் அவ்வரண்மனையிலிருந்து புறம்போக்கப்பட்டா ளாயினும், இப்போதுதான் தன் தந்தையின் வீட்டிலிருந்து அணிந்துவந்த எளிய உடையிலிருந்தவாறே, அவ்வரண்மனையின் மண்டபங்கள் கூடங்கள் அறைகள் முதலியவற்றை யெல்லாந் துப்புரவுசெய்யப் புகுந்தாள். அவ்விடங்களிலுள்ள நாற்காலிகள், பட்டுமெத்தை தைத்த சார்மணைக்கட்டில்கள், சலவைக்கற்பதித்த மேசைகள், பளிங்குவிளக்குகள், அழகிய ஓவியங்கள், பொன் வெள்ளிக் கலன்கள் முதலியவைகளை யெல்லாந் துடைத்துத் தூய்மைசெய்தாள்; எவ்வெவை எவ்வெவ்விடங்களில் இருந்தாற் கண்கவர் வனப்பினவாய்த் தோன்றுமோ அவ்வவற்றை அவ்வவ்விடங்களில் அழகுற அமைத்துவைத்தாள்; அதன்பின் அடுக்களையிற்புகுந்து, அவ்வரண்மனையில் அவளே எல்லா வேலைகளையுஞ் செய்யுந் தொழுத்தைபோற் சிறிதும் ஒப்பின்றிச் சமையற்பண்டங்கள் பாண்டங்கள் முதலானவைகளை யெல்லாம் மிகவும் நேர்த்தியாகத் திருத்திவைத்தாள்.

இவையெல்லாஞ் செய்தானபின், அரசன் அச்சிறந்த திருமணவிழவுக்கு அவ்வூரிலுள்ள நங்கைமார்களை யெல்லாம் வருவித்தான். திருமணம் அயரும் அந்நாளிற், கிரிசெலாள் நிறம் மங்கிய தனது நாட்டுத்துணியை யணிந்தபடியே அந்நங்கைமாரை யெல்லாம் முகமலர்ச்சியுடன் வரவேற்று அவர்க்குச் சிறப்புச்செய்தாள்.

இனி அம்மன்னன், வேறோர் ஊரில் ஒரு குறுநில மன்னனை மணந்துகொண்ட தன் உறவினளாகிய ஒரு சிற்றரசியிடந் தன் புதல்வியையும் புதல்வனையும் ஒப்படைத்து, அவர்களைச் சிறந்த முறையில் வளர்த்து வரு

210477

மாறு ஏற்பாடுசெய்து வைத்தமை முன்னமே குறிப்பிக்கப்பட்டதன்றோ? அங்ஙனம் வைக்கப்பட்ட அவன்றன் புதல்வி இப்போது பதின்மூன்றாண்டுக்கு மேற்பட்ட அகவையினளானாள்; அவன் புதல்வனும் ஆறேழு ஆண்டுக்கு மேற்பட்டவனானான். ஆகவே, அரசன் தனக்கு இனிய நண்பரான ஒரு செல்வரை அச்சிற்றரசியின்பால் விடுத்துத், தன் மகளையும் மகனையும் பரிவாரஞ்சூழப் பல் பெருஞ் சிறப்புடன் அவ்வம்மையார் தன்பால் தன் நகருக்கு அழைத்துவரல் வேண்டுமென்றும், அவர்கட்குந் தனக்குமன்றி வேறெவர்க்குந் தெரியாத அக்கன்னிப் பெண்ணை அரசனாகிய தான் மணஞ்செய்துகொள்ளப் போவதாக வழிநெடுக விளம்பரப்படுத்தி வருதல்வேண்டுமென்றும் அறிவித்தான். அவ்வறிவிப்பினைக் கொண்டு சென்ற அச்செல்வருந் தம்மை நம்பி விடுத்த அச்செய்தியினை அச்சிற்றரசிக்குத் தெரிவித்து, அவளுந்தாமுமாக உறவினர் புடைசூழ அரும்பெருஞ்சிறப்புடன் அரசன் மகளையும் மகனையும் அழைத்துக்கொண்டு குறிப்பிட்ட நாளின் நண்பகல் வேளையில் அவ்வரசனது அரண்மனைக்கு வந்து சேர்ந்தனர். அப்போது அக்கம்பக்கத் தூரிலுள்ளார் பலருந், தம்மரசனுக்குப் புது மனைவியாக வந்திருக்கும் அப்பெண்ணைப்பார்ப்பதற்காக அவ்வரண்மனைக்கண் வந்து குழுமினர்.

செல்வர்களுஞ் செல்வப்பெருமாட்டிகளுங் களிப்புமிக்கு அப்பெண்ணை வரவேற்று ஓம்பினர். அத்திருநாட் கொண்டாட்டத்திற்கென்று ஒப்பனைசெய்யப்பட்ட அழகியதொரு பெரு மண்டபத்தின்கண்ணே கிரிசெலாள் தன் எளியஆடையி லிருந்தபடியே அப்பெண்ணை வரவேற்று, ''எம் மன்னர்பெருமானுக் கென்று புது மனைவியாக வந்த நுங்கள் வரவு திருவருளால் நல்வரவாகுக!'' என்று பணிவொடு மொழிந்தாள்.

அங்கே வந்திருந்த செல்வமகளிரெல்லாரும் அரசனை நோக்கிக், ''கிரிசெலாளைத் தனியே ஓர் அறையினுள்ளாவது வைத்துவிடுங்கள்! அல்லது அந்நங்கையார் முன் அணிந்திருந்த சிறந்த ஆடை யணிகலன்களை அணிந்துகொண்டு வந்தாவது இக்கொண்டாட்டத்தை நடத்தும்படி செய்யுங்கள்! ஏனென்றாற் புதிதுவந்தவர்கள் முன்னிலையில் அவ்வம்மையார் அத்துணை ஏழைமையான தோற்றத்துடன் வந்துநின்று பணிசெய்வது நல்லதன்று!'' என்று எவ்வளவோ வற்புறுத்திச்சொல்லியும், அவன் அவர்களது சொல்லுக்குச் சிறிதும் இணங்கிற்றிலன். எல்லாரும் நாற்காலிகளில் அமர்ந்து வட்டமேசையைச் சூழ்ந்திருக்கக், கிரிசெலாள் தன் எளிய உடையொடு நின்றவண்ணமே அவர்கட்கு வேண்டும் பணியெல்லாஞ் செய்துகொண்டிருந்தாள்.

புதிதுவந்த மணப்பெண்ணைப் பார்த்தவர்களெல்லாருந் தம்மரசன்செய்த மனைவிமாற்றத்தை வியந்து பேசினர். மற்று, அவர்களெல்லாரையும்விடக் கிரிசெலாளே அதனை மிகவுங் கொண்டாடிப் பேசினாள்! அப்பெண்ணுடன்வந்த அவடன்தம்பி, ஆண்டிற் சிறியனாயினும் அறிவிற்பெரியனாய், அவளைத் தன் தமக்கையென்று அறியாமலே, அவள் அரசற்கு ஏற்றமனையாளே எனப் புகழ்ந்துரைத்தனன்!

இப்போது அம்மன்னன், தன் மனையாள் சிரிசெலாளின் பொறுமையைப்பற்றித் தான் தெரியவேண்டுமளவெல்லாம் ஆராய்ந்து தெரிந்துகொண்டமையால், நெஞ்சை இரண்டாய்ப் பிளக்கத்தக்க இத்தனை ஆராய்ச்சிகட்கு உள்ளாகியும் முகஞ் சிறிதுஞ்சுளியாத அவள், அறிவில் மிகச்சிறந்தவளாதலால் தன் அறிவில்லா மட்டித்தனத்தால் இங்ஙனமெல்லாம் இத்துன்பங்களைப் பொருள்செயாது நடந்தாள் என்று கருதுதற்கும் மாட்டானாய், இனி இவளை இப்பல்பெருந் துன்பங்களினின்

றும் விடுவித்து, இவள் தன்பாற் பெறுதற்குரிய உறுதிமொழியினைத் தான் புலப்படுத்துதலே செயற்பாலதெனத் தீர்மானித்தான். தீர்மானித்து, அங்குள்ளார் எல்லார் எதிரிலும் அவன் அவளைத் தன்முன்னே வந்து நிற்குமாறு கற்பித்து, அவளை நோக்கிப் புன்னகைபுரிந்து, "கிரிசெலா, இப்போது யாம் புதிது தெரிந்தெடுத்திருக்கும் இம்மணப்பெண்ணைப்பற்றி நீ யாது நினைக்கின்றாய்?" என வினவினான். அதற்கவள், "எம்பெருமானே, இப்பெண்மணியை யான் பெரிதும் விரும்புகின்றேன்; இந்நங்கை அழகின் மிக்கவராய் இருத்தல்போலவே அறிவிலும் மிக்கவராய் இருப்பாரென்று நம்புகின்றேன். இம்மங்கையொடு தாங்கள் ஒருங்குகூடி, இந்நிலவுலகில் நீங்கள் ஒருவரே பெறற்கரும்பேறு பெற்றுவராக வாழ்வீர்களென்பதில் யான் சிறிதும் ஐயுறுகின்றிலேன். என்றாலும், யான் தங்களை ஒன்றுவேண்டிக்கொள்கின்றேன். என் சொல்லைத் தங்களுள்ளத்தில் ஏற்பிக்கும் வலிவு எனக்கிருந்தால், தாங்கள் தங்கள் முதல் மனைவியைச் சுடுசொற்களால் வெட்டிப்பேசியதுபோ லில்லாமல் தாங்கள் இவ்விளமாதை மிக்க அன்பொடு நடத்துதல்வேண்டும். ஏனென்றால், அச்சுடுசொற்களைப் பொறுத்திருக்குந்தன்மையை இவ்விளமங்கைபால் யான் எங்ஙனம் எதிர்பார்க்கக்கூடும்? இப்பெண்மணி ஆண்டில் மிக இளையராயிருப்பதுடன், கல்விப்பயிற்சியில் மிக மென்மையாக வளர்க்கப்பட்டவராகவுமிருக்கின்றார். மற்றுக், தங்கள் முதன் மனைவியோ உழைப்பிலுங் கடுமுயற்சியிலுந் தொடர்பாக வளர்க்கப்பட்டவள்.

இங்ஙனங் கிரிசெலாள், தன் மகளை மகளென்றறியாமல் தன் கணவற்கு இரண்டாம் மனைவியெனவே நம்பி, அரசன் வினாயதற்குக் கள்ளமின்றி உண்மையாக அடக்கத்துடன் விடை பகர்ந்ததைக்கண்டு காலதியன் என்னும் அம்மன்னன் அவளை அழைத்துத் தன்னருகே

ருக்கும்படி கற்பித்துக், "கிரிசெலா, நீடுவியக்கத்தக்க நினது பொறுமையிற் பழுத்த கனியை நீ நுகர்தற்கு ஏற்றகாலம் இப்போதுதான் அண்மியது; என்னை இரக்கமில்லா வன்னெஞ்சமுரடனெனக் கருதியவர்களெல்லாரும், யான் இழிந்ததேதும் மதிகெட்டுச் செய்திலேனென்பதை இப்போது கடைசியாக அறிந்துகொள்வர். இங்ஙனம் யாதுக்காகச் செய்தேனென்றால், மணந்துகொண்ட ஒரு மனையாளின் நிலை எவ்வாறிருக்கவேண்டுமென்பதை நினக்கு அறிவுறுத்தவும், ஒருவன் ஒரு மனையாளை எங்ஙனந்தெரிந்தெடுத்து எங்ஙனம் வைத்திருக்கவேண்டுமென்பதை எவர் எத்தகையராயினும் அவரெல்லார்க்கும் நன்கு உளத்திற் பதியவைக்கவுமே அங்ஙனம் முன்னமே கருதிச்செய்தேன். இங்ஙனம் ஆராய்ந்து தெளிந்தமையால் இனி நின்னோடு யான் ஒருநாள் ஒருங்கு வாழப்பெறினும் அஃது எனக்கு என்றும் அழியாக் களிப்பினையும் இன்பத்தினையும் பயப்பதே யாகும். இத்தகைய இன்பத்தினை எய்தும் பேறு எனக்கு வாயாது போய்விடுமோ எனவும், அத்தகைய மணவாழ்க்கை எனக்கு நேராது நழுவிவிடுமோ எனவும் யான் முன்னே மிகவும் அஞ்சியதுண்டு.

"முதன்முறை ஆராய்ச்சியாக, யான் நின்னைப் பலவகையாலும் வைதுரைத்த கொடிய இன்னாமொழிகளை நீ அறியாதாய் அல்லை. என்றாலும், அம்மொழிகள் நின் பார்வையிலாதல், சொற்களிலாதல், நடக்கையிலாதல் ஏதொரு மனக்குறையினையுங் காட்டாமைகண்டு, யான் விரும்பியபடி எனதுள்ளம் அடைந்த ஆறுதலுக்கோர் அளவில்லை. அங்ஙனமே, அதனையடுத்து நிகழ்ந்த ஆராய்ச்சிகளிலும் மனவமைதியுற்றேன். எனது சூறைக்காற்றையொத்த நடக்கையினால் யான் நின்னைவிட்டு அகலுமாறு செய்த அவ்வாறுதலே, நீ முன்னே பட்ட கொடுந்துன்பங்களுக்கெல்லாம் ஈடாக இப்போது ஒரு நொடியில்

நினக்கு இனிதாக வருவிப்பேன். என் அழகிய கா[illegible] கிரிசெலா, எனக்குப் புதுமணப்பெண்ணாக நீ கருதிய நங்கையை உளங்களித்து உவகைபொங்க நின் புதல்வியாகத் தழுவிக்கொள்! இச்சிறுவனையும் அவள் தம்பியாகத் தழுவிக்கொள்! இவ்விருவரும் நினக்கும் எனக்கும் பிறந்த மக்களாவர்! இவ்விருவரையும் யான் கொலைசெய்வித்துவிட்டதாகக் கீழ்மக்க ளெல்லாரும் பிழைபாக நினைந்தனர்! யான் நினக்குரிய காதற்கணவனலை! நின்னை உலகத்திலுள்ள ஏனைமாதரார் எல்லாரினும் மேலாகப் பாராட்டி, வேறு எந்த ஆடவனுக்குங் கிடைத்தற்கரிய மனையாளாக எனக்கு வாய்த்த நினக்குஉரிய பெரும்புகழினை நினக்கே தக்கதாக உரிமையாக்கும் நின் காதற்றலைவனும் யானே!'' என்று தன்னுள்ளம் பலவாற்றாற் கரைந்துருக உரைத்தனன்.

என்றிவ்வாறுரைத்து, அவன் அவளைத் தன் கைகளாற் றழீஇ அணைத்து முத்தமிட்டு, இதற்கு முன் எத்துணை இடையூற்றானும் வருவிக்கப்படாத கண்ணீர் இப்போது புதிதுமடைதிறந்த யாறுபோற் றன்னழகிய முகத்தின்கீழ்ப் பெருகியோடப்பெற்ற கிரிசெலாளை அழைத்துக்கொணர்ந்து தன் புதல்வியின் பக்கத்தே அமரவைத்தான். அப்புதல்வியும் அரியதான இத் திரிபுநிகழ்ச்சியைக்கண்டு அடைந்த இறும்பூதுஞ் சிறியதன்று. கிரிசெலாளுந் தன் மக்களிருவரையும் நிரம்பித்துளும்பிய அன்பினாற் றழுவி முத்தமிட்டாள். அங்கே குழுமியிருந்த செல்வருஞ் செல்வமகளிரும் பிறருமெல்லாந் தாம் முன்னே கொண்டிருந்த ஐயமெல்லாம் ஒருங்கே தீரப்பெற்றுப், பேருவகை கிளரக், கிரிசெலாளுக்கு விலையுயர்ந்த பொற்பட்டாடைகளும் மணிக்கலன்களும் அணிவித்து வைத்துப் பார்த்து மகிழ்ந்தனரென்பது.

மக்கள் வாழ்க்கையின் நிலையாமை

மக்கள் வாழ்க்கையின் நிலையாமையினை ஆசிரியர் திருவள்ளுவ நாயனார்,

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு'' என்னுந் திருக்குறளால் நம்முள்ளத்தே நன்றாய் உறைக்குமாறு எடுத்தருளிச் செய்திருக்கின்றார். "ஐயோ! நேற்றிருந்தான், இன்றைக்கு இல்லையே!'' என்று கற்றார்முதற் கல்லாதார் ஈறான எத்திறத்தாரும் பேசிக்கொள்ளுதலையும் நாம் உலக வழக்கில் இடையிடையே கேட்கின்றோம். இங்ஙனம் உலகவழக்கிற் காணப்படும் ஒருபெரிய உண்மையினையே திருவள்ளுவர் தாமும் எடுத்துரைத்தது நமக்கு அதனை நினைவிற் பதியவைக்கும் பொருட்டே யாம். எல்லா உண்மைகளும் உலகவழக்கிற் காணப்படுமாயினும், நந்நெஞ்சம் உடனுக்குடன் இன்பந்தரும் பொருள்களின் வயப்பட்டு அவை தம்மையே பெரும்பாலும் நினைந்துகொண்டிருத்தலால், நிலையான நீண்ட இன்பத்தைப் பயக்கும் பொருள்களைப் பற்றியநினைவு அங்கே புகுந்திருத்தற்கு இடமில்லாமற் போகின்றது. ஆதலால், அந்நெஞ்சத்தில் நான்முகமாய் வந்து குவியுங் குப்பைகூளங்களை அகற்றிப், பேரின்பப்பொருளைப் பற்றிய நினைவு அதன்கட்டோன்றிச் சுடர்ந்தொளிருமாறு செய்வதே நல்லிசைப்புலமை மலிந்த பேராசிரியர்க்குரிய கடமையாகும். ஆகவே, திருவள்ளுவர் அறிவுறுத்திய இவ்வுண்மை, உலகில் இறந்துபடுவாரைக் காண்புழியெல்லாம் மக்கள் தமக்குள்ளே நெஞ்சம் நெக்குடைந்து பேசிக்கொள்ளுதலிலிருந்து புலப்படுகின்றதேனும், மற்றை நேரங்களில் அஃது அவருள்ளத்திற் றோன்றாமல் மறைந்துபோதலின், அஃது அப்பேராசிரியர் அருளிய வாய்மொழியிலிருந்து நமக்கு என்றுமொன்றும் மறவாமல் நினைவூட்டப்படா நிற்கின்றது என்க.

நன்று, மக்கள் வாழ்க்கையானது ஒரோவொருவர்பால் ஒன்றே ஒரோவொருகாற் சடுதியில் மடிந்து மறைந்துபோகக் காண்கின்றனமேயன்றி, எல்லாமக்களிடத்தும் அஃது ஒரேகாலத்தில் இல்லையாய்ப்போகக் காண்கின்றேம் இல்லையே; அங்ஙனமிருக்கச், சிறுபான்மையாய் நிகழுஞ் சில நிகழ்ச்சிகளைக்கொண்டு, மக்கள் வாழ்க்கையானது சடுதியில் மாய்வதென்று பெரும்பான்மைப்படக் கூறுவது பொருந்துமோவெனிற்; பொருந்தும்; நில அதிர்ச்சியினாற் பெரிய பெரிய நகரங்கள் அழிந்துபடுங்கால் அவற்றின்கணிருந்த உயர்ந்த மாடமாளிகைகள் இடிந்தழிய, அவற்றின்கண் உயிர்வாழ்ந்த நூறாயிரக் கணக்கான மக்களும் ஒருநொடியில் மாண்டுபோனமை கேட்டதில்லையா? 1908-ஆம் ஆண்டு நேர்ந்த நில அதிர்ச்சியினால் நீரும் நெருப்பும் பொங்கி **மெசீனாப்** பட்டினத்தை அழிக்க, அதிலிருந்த எழுபத்தேழாயிரமக்கள் ஒரு சிறு பொழுதில் மாண்டுபோனார்கள்! அமெரிக்கா தேயத்திலுள்ள ***சான்பிரான்சிஸ்கோ*** என்னும் பெருநகரானது பதினெட்டடுக்குகள் வாய்ந்த பெரும்பெரு மாடங்கள் உள்ள பெருஞ் செல்வநகராகும்; அஃது 1906-ஆம் ஆண்டு, எப்பிரல், 22-ஆம்நாட் சடுதியிற் றோன்றிய நில அதிர்ச்சியினால் அதன்கணிருந்த அக்கட்டிடங்கள் பலமுகமாய்ப்பிளந்துவிழ, அவற்றின்கணிருந்த மக்களுங் கோடிக்கணக்கான பொருள்களும் அழிந்தன! சின்னாட்களுக்கு முன் நம் இந்திய நாட்டின் வடபகுதிக்கண் நில அசைவினால் உண்டான உயிரழிவு பொருளழிவுகளின் மிகுதியை அறிந்து வருந்தாதார் யார்? இங்ஙனம் அடுத்தடுத்து இந்நிலவுலகின் கண் ஆங்காங்குநேரும் நில அசைவினாலும், நீர்ப்பெருக்கினாலும், எரிமலை நெருப்பினாலுந் திடுமெனச் சிறிதுநேரத்தில் இதுகாறும் அழிந்துபட்ட உயிர்களையும் பொருள்களையுங் கணக்கெடுத்தல் எவராலேனும் ஏலுமா? அதுகிடக்க.

நமது இந்தியநாட்டிலும் பிறநாடுகளிலுங் கொள்ளை நோய் (plague), கொள்ளைக்கழிச்சல் (cholera), அம்மை, நச்சுக்காய்ச்சல் முதலான நோய்களால் ஒவ்வொரு நாளும், ஒவ்வொருதிங்களும், ஒவ்வோராண்டும் மடிந்தார் மடிவார் தொகையை நினைத்துப்பார்க்குங்கால் நெஞ்சந் திகீரென்கின்றது! இவ்விந்தியநாட்டில் 1896-ஆம் ஆண்டிலிருந்து 1903-ஆம் ஆண்டுவரையிற் கொள்ளைநோயால் மடிந்தார் தொகை இருபத்தொரு லட்சத்து ஐயாயிரத்து ஐந்நூற்று நாற்பத்தெட்டு என்றும், 1891-இலிருந்து 1900 வரையிற் கொள்ளைக்கழிச்சலில் மாண்டார் தொகை நாலுலட்சத்து ஐம்பதினாயிரத்து ஐந்நூற்றிரண்டு என்றும், அம்மையிற் செத்தார் தொகை எண்பத்தீராயிரத்து ஐந்நூற்றெண்பத்தெட்டு என்றும், நச்சுக்காய்ச்சலில் இறந்தார் தொகை நாற்பத்துமூன்று லட்சத்து அறுபத்து மூவாயிரத்து ஐம்பத்தைந்து என்றுங் கணக்கெடுத்திருக்கின்றார்கள். இன்னும் பலகாரணங்களால் அழிந்தொழிவார் தொகையுஞ் சாலப்பெரிது. ஆதலால், மக்கள் ஒருங்கே ஒருகாலத்தோரிடத்துமாயக் கண்டிலமென்றுரைப்பது உண்மை நிகழ்ச்சிக்கு மாறுமென்றுணர்ந்து கொள்ளல்வேண்டும். எனவே, மக்கள் வாழ்க்கையானது பொதுவாகவே நிலையில்லாததென்பது தெளியப்படும்.

அஃது உண்மையேயானாலும், மக்கள் ஒவ்வொருவருந் திடீரென இறந்துபடுவரென்பது ஏற்றுக்கொள்ளற்பாலதோவெனின்; எவ்வளவு கருத்தாய்த் தமதுயிரைப் பாதுகாத்தவரும், அவரும் எவரும் எதிர்பாராமலே சடுதியிற் சாதலைப் பார்த்ததில்லையா? பார்வைக்குக் கருங்கல் வடிவம்போல் அழுத்தந்திருத்தம் வாய்ந்த உடம்புடையவர்களாயிருந்தவரும் நெஞ்சடைப்பினால் ஒரு நொடியில் உயிர் துறந்ததைப் பார்த்துங் கேட்டும் இருக்கின்றேம். பெருஞ்சினங்கொண்டு அதனால் ஓரிமைப்பொழுதில்

மாண்டவர் எத்தனையோ பேர்! தமக்குயிர்போல் அன்பாயிருந்தார் சாவக்கேட்டு, ஆற்றாமையால் உடனே உயிர் நீங்கினார் எத்தனையோ பேர்! கல் தடுக்கி வீழ்ந்து, வீழ்ந்த அந்நொடியே உயிர்மாய்ந்தார் எத்தனையோ பேர்! உறக்கத்திற் பாம்பு தீண்டப்பட்டுக் கண்விழியாமலே இறந்துகிடந்தார் எத்தனையோ பேர்! இஞ்ஞான்று நம் கண்ணெதிரே இங்ஙனம் எதிர்பாராமலே சடுதியில் இறப்பார்போலப், பழையநாளிலும் எதிர்பாராப் புல்லிய காரணங்களால் இறந்தார் பலரை ஆங்கில ஆசிரியரொருவர் எடுத்துக்காட்டி இருக்கின்றார்:—

‘இசிக்கிலர்’ என்னுங் கிரேக்க நாடகாசிரியர் வழி நடந்துசெல்கையில், வானத்தின்கண்ணே பறந்துசென்ற ஒருகழுகின் நகங்களிலே இடுக்கப்பட்டிருந்த ஓர் ஆமையானது அங்கிருந்து நழுவி அவர் தலையில் விழ, அவர் உடனே கீழ்விழுந்து உயிர்துறந்தார்.

சிசிலிதேயத்திற் கொடுங்கோன் மன்னனாயிருந்த ‘அதோகிலன்’ என்பான் தனது ௯௫-ஆம் ஆண்டில் ஒரு பல்லுக்குத்தியினாற் றனது பல்லைக் குத்திக்கொண்டிருக்கையில், அதன் முனையிற் பூசப்பட்டிருந்த நஞ்சினாற் சிறிதுநேரத்திற் கொல்லப்பட்டான்.

‘அனக்கிரீயன்,’ என்னுங் கிரேக்க நல்லிசைப் புலவர் ஒருநாட் கொடிமுந்திரிப்பழங்கள் தின்றுகொண்டிருக்கையில், ஒரு பழத்தின் ஒரு சிறுவிதை நெஞ்சில் அடைக்க உடனே இறந்துபட்டார்.

‘பாசர்’ என்பார் தமது இடதுகைப் பெருவிரலில் ஒருகூரிய ஊசியின் முனை தைக்க, அதனால் உடனே மாண்டுபோனார்.

‘சாலகன்’ என்னுங் குறிகாரன், தான் இறந்துபடு நாள் இன்னதென்று முன்னே குறிப்பிக்கப்பட்டபடி அந்நாளிற் சாவாமற் பின்னுந் தான் பிழைத்திருந்ததனை

நினைந்து, ஒருநாள் அளவுக்குமிஞ்சிச் சிரிக்க, அதனால் உடனே உயிர்நீங்கப்பெற்றான்.

‘எட்டாஞ் சார்லசு’ என்னும் அரசன் தன் மனையாளைப் பந்து விளையாடும் இடத்திற்கு அழைத்துக்கொண்டு செல்கையில், தன் அரண்மனைவாயிலின் மேற்படி தலையில் இடிக்க, அதனால் அந்நொடியே இறந்து வீழ்ந்தான்.

‘பேபியர்’ என்னும் உரோமநடுவர் ஒருநாள் தாம் பால் பருகிக்கொண்டிருக்கையில் அதிற்கிடந்த வெள்ளாட்டுமயிர் ஒன்று தமது மிடற்றிற் சிக்கிக்கொள்ள அதனால் மாய்ந்துபோனார்.

‘பிரடரிக்குலூயிசு’ என்னும் உவேல்சு இளவரசர் தாம் பந்தாடிக்கொண்டிருக்கையிற், பந்து மேலேபட்டு இறந்துபோனார்.

‘இதடாக்கு’ என்பவர் வயலில் அறுப்பு அறுக்கையில் மிகவும் நாவறட்சிகொண்டுந், தன்குரு இட்ட கட்டளைப்படி ஒருதுளி தண்ணீரும் பருகாதிருந்தமையால் அங்கேயே உயிர்நீங்கப்பெற்றார்.

‘ஆருப்லூயிசு’ என்னும் மன்னன் தன் குதிரைமேல் ஏறிச்செல்லுங்காற் குறுக்கே ஒருபன்றி அக்குதிரையின்கீழ் ஓட, அதனால் அக்குதிரை தடுக்கிவிழ, அம்மன்னனுங் கீழ்விழுந் துடனே மாண்டுபோனான்.

‘ஆதவர்’ என்னும் புலவர் வறுமையால் உணவின்றிப் பட்டினியாயிருத்தல் கண்டு ஒருவர் அவர்க்கு ஒரு பொற்காசு கொடுத்தனர். அவர் அக்காசைமாற்றி ஓர் அப்பம்வாங்கி, அதனைப்பிட்டுப், பிட்டதுண்டை வாயிலிட்டுமென்று விழுங்குகையில் உயிர் நீங்கினார்.

‘பிலோமினர்’ என்பார் தாம் உண்ணுதற்கென்று வைத்த அத்திப்பழங்களை ஒருகழுதை வந்து தின்ன, அதுகண்டு அவர் மிகுதியாய்ச் சிரித்தமையால் உயிர் பிரியப்பெற்றார்.

‘குயினிலாடன்’ என்னும் ஒருமருத்துவன் பிறன் ஒருவன் கையிற் றைத்த ஒரு சிராயைப் பிடுங்கி எடுக்கையிற் றன்கையிற் சிறிதுகாயம்பட்டு இறந்துபோனான்.

‘சியூகர்’ என்னும் ஓவியர் தாம்வரைந்த ஒரு குறிகாரக்கிழவியின் உருவைக் கண்டு தாமே மிகுதியாய்ச் சிரிக்க, அதனால் உயிர்துறக்கலானார்.

இவ்வாறு முன்னாளிலும் பின்னாளிலும் மிகச்சிறிய காரணங்களாற் சடுதியில் மாண்டுபோயினார் தொகையைக் கணக்கெடுக்கப்புகுந்தால், அது கணக்கிலடங்காது. ஆகையால், மக்கள் தனித்தனியே திடீரென மாளுதல் நாடோறும் ஆங்காங்கு நிகழும் உண்மை நிகழ்ச்சியேயல்லாமற் பொய்யாகாது. ஆகவே, பெருந்தொகையினரான மக்கள் ஒருநொடிப்பொழுதில் மாய்தலும், அவருள் ஒவ்வொருவர் ஒவ்வொருகாற் றிடுமெனமாய்தலும் ஆங்காங்கு அடுத்தடுத்து நிகழ்தல் விரிந்த ஆராய்ச்சியுடையார்க்கெல்லாம் இனிது விளங்கிக்கிடத்தலின், மக்கள் வாழ்க்கையானது எந்தவகையிற் பார்த்தாலும் நிலையில்லாததேயாமென்பது நன்குபெறப்படுமென்க.

நன்று, அங்ஙனம் மக்கள் வாழ்க்கையானது நிலையில்லாததாய் ஒழிதல் உண்மையேயாயினும், அதைப்பற்றி நாம் அடுத்தடுத்து நினைதலாற் பயன் என்னை? நாம் நிலையில்லாமல் எந்தநேரத்தில் மாய்வமோ என ஒருவர் அடிக்கடி எண்ணிப்பார்ப்பராயின், அவர் அதனால் எதொரு முயற்சியுஞ்செய்வதில் மனவெழுச்சி பெறாது, அறிவு குன்றிச் செயலற்றுத் துயரங்குடிகொள்ளப்பெற்ற நெஞ்சினராய்ச், சாநாள் வருமுன்னரே அதனை எதிர்பார்த்திருந்து, தமக்கும் பிறர்க்கும் பயன்படுதலின்றிக் கழிவரல்லரோ? மேலும், மக்களெல்லாரும் “நாம் நிலையாயிருப்போம்; நிலையாயிருந்து பலவேறு இன்பங்களை நுகர்வோம்; அங்ஙனம் நிலையாயிருந்து இன்பம் நுகருதற்குரிய நாம் இன்பந்தரும் பொருள்களையும் மக்களையுந்

லாது. இனி, அத்தோற்றம் இறந்துபோன ஒரு பெண்மகளின் நினைவின் தோற்றமோ அல்லதவளின் நுண்ணுடம்பின் தோற்றமோ, இன்னதுதானென்று உறுதிப்படுத்துதற்குச் சான்றில்லை. அது நிற்க.

இனி, நனவின்கட் பலர்க்குத்தோன்றிய சில நினைவுருவ மெய்ந்நிகழ்ச்சிகளை ஈண்டு எடுத்துக்காட்டுவாம்.

1850-ஆம் ஆண்டு, பிப்பிரவரி 16-ஆம் நாள், பால்சன் எனப்பெயரிய ஓர் ஆங்கிலமாதரார் தமது இல்லத்தின் அடுக்களையிற் சாய்ங்காலவேளையிற் றங்குடும்பத்தினருடன் தேநீர்பருகிய பின், தன்னேவற்காரி மேன்மாளிகையிற் படிக்கும் அறையை ஒழுங்குசெய்து வைத்தனளாவென்று பார்க்கும்பொருட்டுப் படிமீது ஏறிச்சென்றார். படிகளின் மேல்உச்சியிற்சென்றதுஞ், சிறிது காலத்திற்குமுன் தம்மிடமிருந்துபோன ஒருமங்கை தம்மைக் கடந்து செல்லக்கண்டார். கண்ட அம்மங்கை கரியதொருபட்டாடை உடுத்து, முகத்தின்மேல் வெள்ளிய மெல்லாடை கவித்திருந்தனள். அவள் அம்மாதரைக் கடந்து சென்றபோது அவள் பூண்டிருந்த அவ்வாடை சரசரவென அரவஞ்செய்தது. அவள் முகத்தை அம்மாதரார் ஒருசிறிதுதான் பார்க்கக்கூடியவரானார். ஏனென்றால், அவள் அரவமின்றி மிகவிரைவாகச்சென்று, அம்மாதரார் படுக்கும் அறையினுள்ளே நுழைந்துவிட்டனள். அவ்வுருவத்தைக்கண்டதும் அவர் “ஐயோ காரலின்!” எனக்கூவிக்கொண்டே கீழிறங்கித் தம் கணவன் பக்கத்தேபோய் உணர்விழந்து கீழ்விழுந்துவிட்டனர். பிறகு பெரும்பாடுபட்டு அவர் அக்களைப்புத் தீர்க்கப்பெற்று உணர்வுகூடி எழுந்தனர். அடுக்களையில் வேலைசெய்யும் பணிப்பெண், மறுநாட்காலையில் அடுப்பைத் துடைத்துத் துப்புரவுசெய்கையில், அதே பெண்மகளுருவங் கறுப்புத்துணியுடுத்து முகத்தின்மேல் வெள்ளாடை மூடியணிந்தபடியாய் மார்பின்கட் குறுக்கிட்ட கையினளாய்த் தன் பக்கத்தே அமர்ந்திருக்கக்கண்டு அச்சிறுமி பெரிதும் வெருக்கொண்டாள். அதனால், அப்பணிப்பெண்ணை அவ்வடுக்களையறையினுட் போகச்செய்வது பெருவருத்தமாயிற்று. இங்ஙனம் அப்பணிப்பெண்ணும் அதேயுருவத்தைக்கண்ட அவ்வரலாற்றினைச் சொன்னால், அஃதம்மாதர்க்குப் பெரியதொரு நடுக்கத்தை

உண்டுபண்ணுமென நினைந்து, அவ்வீட்டிலுள்ளார் எவரும் அதனை அவர்க்கு மறுநாளிரவிலுஞ் சொல்லிற்றிலர். என்றாலும், அவ்வம்மையாரைக் காணவந்த அண்டை வீட்டவர்கள் அவர் கண்ட அவ்வுருவத்தோற்றத்தைப்பற்றிக் கேட்டு இறும்பூதுற்று, அவர்தம் மருகியாரான காரலின் நங்கைதன் உடல்நலத்தைக் குறித்து உடனே ஒருகடிதம் எழுதிக்கேட்கும்படி வற்புறுத்தினர். அவ்வாறே அவ்வம்மையார், தொலைவாயதோர் ஊரிலிருந்த தம் மாமன் மாமியர்க்கு ஒருகடிதம் அடுத்தநாள் இரவே எழுதிவிடுக்க, அதற்கு விடையாகவந்த கடிதத்தில், மருகி காரலின் உருவத்தை அம்மாதரார்கண்ட அதேநாள் மாலைக்காலத்தில் அவள் இறந்துபட்டாளென்பது குறிக்கப்பட்டிருந்தது.

இம்மெய்வரலாற்றிலிருந்து, பால்சன் மாதரும் அவர் தம் இல்லப்பணிப்பெண்ணும் விழித்திருக்கையிலேயே கண்ட காரலின் மாதின்உருவம், அம்மாது இறக்குந்தறுவாயில் தன் மாமியாகிய பால்சன் அம்மையாரை அன்பினால் நினைந்தமையால் உண்டாயதாகும். இப்பெண்மகள் தான் இறந்துபோதற்குச் சிறிது காலத்தின்முன் பால்சன் அம்மையார் இல்லத்திற் போந்து சில நாள் தங்கியிருந்து அவருடன் அன்பினால் அளவளாவியிருந்தவள். அங்ஙனம் அளவளாவியிருந்து பிரிந்த சின்னாட்களில் அவள் இறக்கநேர்ந்தமையின், அவள் அந்நேரத்தில் அன்பிற் சிறந்த தன் மாமியை உறுத்துநினைக்கலானது இயற்கையேயாம். உறுத்துநினைக்கும் நினைவு நினைந்தாரது வடிவினை நினைக்கப்பட்ட அன்புடையார் கண்முன்னே தோன்றச்செய்தலும் ஆங்காங்கு நிகழாநிற்றலின், பால்சன் அம்மையாரும் அவர்தம் பணிப்பெண்ணுங் கண்ட அவ்வுருவம் நினைவுருவமேயல்லாது ஆவியுருவம் அன்றென்பது தெளியப்படும். அற்றேல், அவ்வுருவம் அன்பின் தொடர்பு இல்லாத அப்பணிப்பெண்ணின் கண்கட்கும் புலனாயதென்னையெனின்; ஒருவர் தம்முறவினர் ஒருவரது இல்லத்திற் போந்து அளவளாவியிருக்குங்கால், அவ்வில்லத்து ஏவலாளரில் அறிவுவாய்ந்த ஒருவர் தமக்கு அன்பினாற் பணிசெய்தனராயின், அத்தகைய ஏவலரையும் அந்நேரத்தில் நினைப்பதூஉம் இயற்கையே யுண்டாமாகலின், அவ்வுருவம் அப்பணிப்பெண்ணுக்குந் தோன்றலானது பொருத்தமேயாமென்க.

இனித் ‘தேகிரீன்’ என்னும் படைஞர் கண்ட நினைவின் தோற்றமும் விம்மிதம் பயப்பதொன்றாய் இருத்தலின் அதனையும் இங்கெடுத்துக்காட்டுதும்; அவர் பின்வருமாறு வரைகின்றார்:—

“யான் ஷாங்கையில் இருந்தபோது இம்முதல் நிகழ்ச்சி தோன்றுவதாயிற்று. அது 1854-ஆம் ஆண்டு மேத்திங்கள். இராப்பொழுது மிகவும் அழற்சிவாய்ந்ததா யிருந்தது. சீனர்கள் திடீரெனப்போந்து தாக்குவரென்னும் அச்சத்தினால், யான் அப்போது எம்மைச் சூழவிருந்த இடர்களை நினைந்தவண்ணமாய் என் படுக்கைமேல் மல்லாந்து படுத்து விழித்துக்கொண்டிருந்தேன். வரவர ஏதோ ஒன்று என்படுக்கையறையினுட் டோன்றுவதாக உணர்ந்தேன். என் கட்டிலுக்கு ஓரடிதொலைவில் மூடுபனிபோன்ற மெல்லிய ஒரு வெள்ளியபொருள் இடைவெளியில் தொங்குவதுபோல் எனக்குத் தென்பட்டது. முதலில் அஃது ஒரு நிலாக்கதிரின் தோற்றமாயிருக்கலாமென எண்ணி அதனை உன்னியாமலிருந்தேன்; பின்னர்ச் சிறிதுநேரத்தில் அஃது என் தங்கை **பானி** என்பவளின் வடிவமென அறியலானேன். துவக்கத்தில் அவளது முகந் துயரக்குறிப்புடையதாகக் காணப்பட்டது; பிறகு அதன்கண் இனியதொரு புன்னகை தோன்றலாயிற்று; என்னை அவள் இன்னாரெனத் தெரிந்துகொண்டாற்போல் என் முகமாய்த் தன் தலையை வளைத்துநோக்கினாள். அத்தோற்றத்தைப்பார்த்து யான் மிகவும் மருண்டுபோனமையால், அதனொடு பேசுதற்கும் எனக்கு நா எழவில்லை; என்றாலும், அதைப்பற்றி எனக்குச் சிறியதோரச்சமும் உண்டாகவில்லை. அவ்வுருவம் முதலில் எவ்வாறு சிறிது சிறிதாய்க்கட்புலனாகியதோ அவ்வாறே அது சிறிது சிறிதாய் மறைந்தேகியது. பின்னர் யாம் அறிந்த செய்தியால், யான் என் தங்கையின் உருவத்தைக்கண்ட அதே நாளிலேதான் அவள் திடுமென இறந்துபட்டாளென்பது விளங்கலாயிற்று.

“இந்நிகழ்ச்சிக்குறிப்புகளை யான் தங்கட்கு எழுதிவிடுப்பதாக உறுதிசொன்ன அதேநாளில் என் மற்றொரு தங்கை **எலிஸிசிலி**க்கும் அவற்றை எழுதியிருந்தேன். அவள் அதற்கு விடையாக வரைந்த கடிதத்திற், “பானி எனக்குமுன்னே தோன்றிய நேரத்தில் யான் விழித்திருக்கவில்லை; ஆனாலும், யான் உடனே

கண்விழித்து, நீங்கள் விளக்கியெழுதியவாறே அவளது உருவத்தோற்றம் இருக்கக்கண்டேன். யான் அப்பொழுதே என் கைகளை நீட்டிப் "பானி! பானி!" எனக்கூவினேன். அவள் என்னைப்பார்த்துப் புன்சிரிப்புக்கொண்டு, என்னைவிட்டுப் பிரிவதிற் றுயரமுற்றாள்போற் காணப்பட்டுப், பின்னர்த் திடீரென மறைந்து போயினாள்" என்பது குறிக்கப்பட்டிருந்தது.

இது நேர்ந்தகாலத்தில் தேகிரீன் என்பவரும், அவர்தம் மற்றொருதங்கை எலிமிசிலி என்பவளும் ஒருவரைவிட்டொருவர் ஆயிரமைலுக்கப்பால் விலகியிருந்தோராவர். அதனால், அவ்விருவருந், தம்தங்கை மிகநோயாய்க் கிடந்தனளென்றாவது, இறந்து போவளென்றாவது நினைத்தற்கு இடமேயில்லை. ஆனால், இறந்துபோனதங்கையோ தான் உயிர்விடுதற்குமுன், தனது கட்டிலைச் சூழ இருந்தாரிடத்தில் தன் தமையனையுந் தமக்கையையும்பற்றிப் பேசியதுண்டு. அவள் உயிர்நீத்தது 1854-ஆம் ஆண்டு மே, 30-இல் இரவு 10-மணிக்குமேல் 11 மணிக்குள்ளாகும்.

இன்னுங், 'கூட்' எனப்பெயரிய ஓரம்மையார் 1872-ஆம் ஆண்டு நவம்பர்த்திங்கள் ஈற்றிலோ அல்லது டிசம்பர்த்திங்கள் முதலிலோ ஒருநாள் விடியற்காலையில் ஐந்துமணிக்குமேல் ஆறுமணிக்குள்ளாகப் பகலவன்வெளிச்சந் தோன்றுதற்குச் சிறிது முன்னே தோன்றிய ஓர் உருவத்தோற்றத்தால் துயிலொழிந்து விழித்துக்கொண்டார். அவ்வுருவமானது நீண்டவடிவினதாய் இரவிற்பூணும் ஆடையணிந்து அவ்வம்மையாரின் கட்டிலைக் குனிந்து நோக்கக்கண்டார். அதனை அவ்வம்மையார் உற்றுநோக்க, அது தம் நாத்துணாரின் வடிவமாய் இருக்கக்கண்டதுடன், அது தம்மைத் தன்கையாற் றொட்டதெனவுந் தெளிவாய் உணர்ந்தனர்.

அவ்வுருவம் அங்ஙனம் அவ்வம்மையார்க்குத் தோன்றியது போலவே, நெடுந்தொலைவில் வேறோர் ஊரில் உயிர்வாழ்ந்த முதியோளான தன் அத்தையின்முன்னுந் தோன்றியது. அம்முதியமாதை அணுகி அத்தோற்றத்தைப்பற்றிக் கூட் அம்மையாரின் கணவர்கேட்க, அவள், ஒருநாள் விடியற்காலையில் தன் படுக்கையறையின் ஓர் இருண்டமூலையிலிருந்து ஒருசுடரொளிவடிவாய் அத்தோற்றம் வந்ததென்றும், அஃது அத்துணை யொளியொடு

துலங்கினமையால் அதனைத் தன்மருமகளெனவே தான் கண்டுணர்ந்தனளென்றும், அவ்வுருவத்தின்மேற் காணப்பட்ட ஆடையில் அதன் பூத்தையலைக்கூடத் தான் காணக்கூடியதாயிருந்ததென்றும் எடுத்துரைத்தனள்.

இனித், தன் அத்தையார்க்கேயன்றிக், கூட் அம்மையாரின் கணவர்தம் தமக்கையார் முன்னிலையிலும் அத்தோற்றம் அதேநாளின் அதேபொழுதில் அவ்வொளிவடிவிலேயே தோன்றிற்றென்பதும் பின்னர்த் தெரியலாயிற்று.

இவ்வாறு வெவ்வேறாக வெவ்வேறூரிலிருந்த மூவர் முன்னிலையிலும் விடியற்காலையில் அவர் விழித்துக்கொண்ட நேரத்திற், கூட் அம்மையின் நாத்துணார்வடிவந் தோன்றிய வியத்தகு நிகழ்ச்சியை, அம்மூவரும் பின்னர் ஒருங்காராய்ந்துபார்க்க, நெடுந்தொலைவில் அமெரிக்கா தேயத்திற்குத் தன் கணவருடனுந் தன் மூன்றுபிள்ளைகளுடனுஞ்சென்று பாஸ்டன்நகரிற் குடியேறிய அவ்விளமாது அம்மைநோயினால் இறந்துபோயினாள் என்னுஞ்செய்தி அந்நகரில் வெளியான புதினத்தாளிற் குறிக்கப்பட்டிருந்ததறிந்து இறும்பூதுற்றனர். அங்ஙனம் அவள் இறந்தநேரத்திலோ அல்லததற்குச் சிறிதுகழிந்தோ அவளுருவத்தோற்றம் அம்மூவர்க்குந் தோன்றியதாதல் வேண்டுமென்பது, பிறகு அம்மூவரில் இருவர் அதனைக்கண்ட நாளையும் பொழுதையும் ஒத்துநோக்கினமையாற் புலனாயிற்று. மூன்றாம்மாதர்க்கு அத்தோற்றங் காணப்பட்டநாள் அவராற் குறித்துவைக்கப் படாமையால் அதைப்பற்றிமட்டும் உறுதிசொல்லல் இயலவில்லையென்று அதனை ஆராய்ந்த ஆசிரியர் நுவன்றனர். அதுநிற்க.

மேற்காட்டியவாறெல்லாம் உறவும் அன்பும் உடையாரில் ஒருவர் இறந்துபடுங்கால், அவர் அந்நேரத்திற் றமக்குரியாரை அன்பினால் நினைக்க, நினைத்த அந்நினைவு அந்நேரத்தில் அவரிருந்த உருவநிலையினை, நினைக்கப்பட்டார் ஒருவர் அல்லது இருவர் அல்லது மூவர் முன்னிலையிற் றோன்றச்செய்தல் மறுக்கப்படாத மெய்ந்நிகழ்ச்சிகளாய் ஆங்காங்கு உலகமெங்கணும் நிகழ்தலை விளக்கி வரைந்திட்டாம். இனி, அவ்வாறின்றித், தாம் இதற்குமுன் கண்டு கேட்டுப்பழகியறியாத பொருள்களின் றோற்றங்களையும் மக்களின் றோற்றங்களையுஞ் சிலர் பலர் விழித்திருக்

கையிலேயே தம் கண்ணெதிரே காணப்பெறுதலாகிய நிகழ்ச்சிகளும் ஒரோவொருகால் ஆங்காங்கு மெய்யாகவே நிகழ்கின்றன. இத்தன்மையவாகிய தோற்றங்களை நினைவின் றோற்றத்தின்கீழ்க் கொணர்ந்துவைத்து விளக்கிக்காட்டுதல் இயலாததாயிருக்கின்றது. தாம் முன் கண்டு கேட்டுப் பழகிய பொருள்களையே ஒவ்வொருகால் மக்கள் உறுத்துநினைக்க மாட்டுவரன்றித், தாங் காணாத கேளாத பழகாத பொருள்களை அங்ஙனம் நினைக்கமாட்டுவாரல்லர். ஆகையால், முன்னறியாத பொருள்களின் றோற்றங்கள் சிலகாற் சிலராற் காணப்படுமாயின், அவைதம்மை உயிரோடுலவும் மக்கள் நினைந்த நினைவின் றோற்றங்களாகக் கொள்ளுதல் இயலாததேயாம். அத்தகையதோற்றங்கள் உயிரோடுலவுவார் நினைக்கும் நினைவின்றோற்றங்கள் ஆகாவிடின், மற்று அவை இறந்துபோனவர்தம் நினைவின் றோற்றங்களாகவாதல், அல்லதவர்தம் ஆவியுருவங்களின் றோற்றங்களாகவாதல் கொள்ளுதலே முறையாம். தாம் முன் கண்டு கேட்டுப் பழகியறியாத சில பொருள்களின் றோற்றங்களைச் சிலர் காண்டலுக்குச் சில உண்மை நிகழ்ச்சிகளை இங்கெடுத்துக் காட்டுவாம்:—

1851-ஆம் ஆண்டு மேத்திங்களில் 'உவார்டு' எனப்பெயரிய ஓம்மையார் தாமுந் தங்கணவருங் கண்ட ஒரு வியத்தகு காட்சியினைப்பற்றிப் பின்வருமாறெழுதுகின்றார்: "மேத்திங்களில் யானும் என்கணவரும் அண்டையிலுள்ள எங்கள் நேசர்களின் விருந்தாட்டு ஒன்றிற்கு ஒருநாளிரவிற் போய்வந்தோம். நாங்கள் திரும்பிவந்தபொழுது மணி 12. எங்கள் வேலைக்காரர்களெல்லாரும் அந்நேரம் உறக்கத்திலிருந்தமையால், யாங்களே வீட்டினுள் நுழைந்து, நேரே எங்களது படுக்கையறைக்குச் சென்றோம். அன்றுமாலையில் அமைதியான அவ்விருந்தாட்டிலிருந்து வந்தபின், யாங்கள் பேசவேண்டுவதொன்றும் இல்லாமையால், என்கணவனார் உடனே கட்டிலிற்படுத்து உறங்கிவிட்டார். யானும் அவரைப்போலவே படுக்கச்செல்லும்பொருட்டு மெழுகுதிரிவிளக்கை அணைத்துவிட்டு, எங்களது அறையின் வாயிற்கதவை நோக்கியபடியாய்க் கட்டிலின்மேல் ஏறினேன். அப்போது அவ்வாயிற்கதவின் உச்சிக்கு அருகாமையில் ஒரு புதுமையான சுடரொளி அசைவொடு தொங்கிக்கொண்டிருக்கக் கண்டு மிக

வும் இறும்பூதுற்றேன்; அஃது ஆறுவிரற்கடை நீளமும் நாலுவிரற்கடை அகலமும் உடையதாய் நீலநிறத்துடன் ஒளிர்ந்தது. அதுகண்டு யான் மிகவுந்திடுக்கிட்டேன்; மேலும் மிகுதியாய்க் கலங்கியிருப்பேன்; ஆனால், எனது நெஞ்சத்துடிப்பின் அரவத்தால் என்கணவர் விழித்துக்கொண்டார். விழித்தவர் யாது நேர்ந்ததென என்னைவினவ, இன்னும் அவ்வாயிற்படியண்டை தொங்கிக்கொண்டிருந்த அச்சுடரொளியை நோக்கும்படி அவரைத்தூண்டினேன். அங்ஙனமே அவரும் அதனைநோக்க, அஃது யாதாயிருக்கலாமென்று யாங்கள் எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், மற்றொரு சிறியசுடர் அதனைப்போலவே அதன்பக்கத்தே வந்துசேர்தல் கண்டோம். வியப்பினைத்தரும் இவ்விரண்டு சிறு சுடரும் பின்னர் எங்களைநோக்கி மெல்லவருதல் கண்டு எங்கட்குண்டான இறும்பூது இவ்வளவென அளவிடற்பாலதாயில்லை. அவைகள் அங்ஙனம் எங்கள் கட்டிலண்டை வரவே, யாங்கள் அவற்றின் தன்மையை ஆராய்ந்துபார்க்கத் தீர்மானித்துப், படுக்கைமேல் எழுந்துட்கார்ந்தோம். என்கணவர் அவற்றைத் தம் கைகளாற்பிடித்தார்; பிடித்து அவற்றை எம்மிடமிருந்து தொலைப்பான்வேண்டி அவற்றைத் தம்மிரண்டுகைகளின் நடுவே வைத்துத்தேய்த்தார். ஆனால், யாங்கள் பெரிதும்வியக்க அவை சிறு சிறு ஒளிமணிகளாய் உடைந்து எங்கள் மெத்தைத் துப்பட்டிமேலெல்லாம் பாதரசம்போல் ஓடின. அதுகண்டு, அவைகளை அவித்தற்கு யாங்கள் முயல்கையில் அவை கட்புலனாதலின்றி மறைந்துபோயின." என்பது.

மேற்சொல்லிய மெய்ந்நிகழ்ச்சியில் ஒருமாதர்க்கும் அவர் தங் கணவர்க்கும் ஒரேகாலத்திற் கட்புலனான நீலச்சுடரொளி, அதற்குமுன் அவர் கண்டறியாததொன்றாகும். அவ்விருவரும் அதனைக்கண்டதூஉங் கனவிலன்றி நனவின்கண்ணதேயாகும். அத்தோற்றத்தை அவ்வொருநாளிலன்றி அதற்குமுன்னும் பின்னுந் தாங்கண்டதில்லையென்றும் அவர்கள் உறுதிமொழிபுகன்றிருக்கின்றனர். ஆதலால், அப் புதிய சுடரொளித்தோற்றம் யாது? அஃது எங்கிருந்துவந்தது? அஃதேன் அவர்கள் முன்னிலையிற் றோன்றியது? அஃது அவ்வாறு தோன்றியதன் குறிப்பு என்னை? என்று அவ்விருவரும், ஆராய்ச்சிவல்ல ஆசிரியரும் எவ்வளவோ

ஆராய்ந்துபார்த்தும், அதைப்பற்றி அவர்கள் ஏதொரு முடிவுந் தெரிந்துகொள்ளல் இயலவில்லை. இங்ஙனமே தாம் முன்பின் காணாத ஒரு குதிரைவண்டியின் தோற்றத்தை ஒரு துரைமகனாரும் அவர்தங் குடும்பத்தாருங் கண்டவரலாற்றினை அத்துரைமகனார் கூறியபடியே இங்கு மொழிபெயர்த்து வரைவாம்:-

“அஃது ஆகஸ்டுத்திங்கள்; இராப்பொழுது நிலவின்றி இருண்டு ஓவென்றிருந்தது. ஒருநாள் நள்ளிரவில் யான் படுக்கைக்குச் செல்லும்முன், எனது வழக்கப்படி வானத்தின் நிலைமையைப் பார்க்கத் தலைவாயிலிற் சென்றேன். சென்று, அதன்படிமேல் ஒருநொடிப்பொழுதுதான் யான் நின்றிருப்பேன்; அப்போது சடுதியில் இரட்டைக் குதிரைகளால் இழுக்கப்பட்ட ஒரு சாரட்டுவண்டி பெட்டிமேலிருந்த இருவராற் செலுத்தப்பட்டு எங்கள் வீட்டுப்பக்கமாய்த் திரும்பிவரக்கண்டேன். அஃது எங்கள் வீட்டினெதிரே மிகுவிரைவாய்ச்சென்று, இரண்டு செங்குத்தான கரைகளுக்கு நடுவே ஓடும் ஒரு நீரோட்டத்திற்குப் போகும் ஒரு வழியிற் புகுவதாயிற்று. எங்கள் வீட்டின் அப்பக்கத்தில் ஏதொரு வண்டிப்பாட்டையும் இல்லாமையால், அவ்வழியே விரைந்துசெல்லும் அவ்வண்டி வெள்ளத்திற்போய் விழுமேயென அஞ்சி, வண்டியை நிறுத்துமாறு வண்டியோட்டிகளை அழைத்துக்கூவினேன். ஆனாலும், அஃது அந்நீரோட்டத்தின் வரையிற்சென்று பின்னர்த்திடீரென நின்றுவிட்டது; அதன்பின் அஃது அங்கிருந்துதிரும்பி அடுத்திருந்த மைதானத்திற்சென்றது. யான் உடனே வீட்டைவிட்டு அவ்வண்டியண்டை போயினேன்; அந்நேரத்தில் என்மகனுங் கையிற்பிடித்த ஒரு கண்ணாடிவிளக்குடன் என்பால் வந்துசேர்ந்தனன். பெட்டிமேலிருந்த ஆட்களிருவருங் ஏதும்பேசிற்றிலர். அவ்வண்டியினுள்ளிருந்தும் ஏதொருபேச்சுக்குரலுங் கேட்கவில்லை. என்மகன் வண்டியினுள்ளே நோக்கினான். அப்போது அவன்பார்வைக்குத் தென்பட்டதெல்லாம், அவ்வண்டியினுள்ளே ஒருமூலையில் முறைப்பாக உட்கார்ந்திருந்த ஒரு பெண்பாலின் வடிவமேயாகும். அவ்வடிவம் முடியிலிருந்து அடிவரையில் வெளேலென்ற வெள்ளுடைமேற்கொண்டிருந்தது. வெளியே உட்கார்ந்திருந்த ஆண்பாலார் இருவரும், உயிர்ப்பொருளென்னுங் குறிகாட்டாமல் அரவமின்றி

உள்ளேயிருந்த பெண்பாலெனத் தோன்றிய ஒரு வெள்ளிய உருவும் வாய்ப்பேச்சு ஏதுமில்லாதிருந்தமை ஒருபெரும் புதுமையாகக் காணப்பட்டது. யான் அவ்வூரின் வளப்பமெல்லாம் நன்கறிவேனாயினும், இப்போது தோன்றிய வண்டியையும் அதனையோட்டும் ஆட்களையும் அதனையிழுக்குங் குதிரைகளையும் இதற்குமுற் சிறிதும் அறியேன். பின்னர் அவ்வண்டி அம் மைதானவெளியினூடேசென்று, அங்குள்ள குதிரைவாடி (இலாயத்து)க்குப் போகும் பாட்டையிற்புகுந்து அதனையுங் கடந்துபோய்விட்டது. மறுநாட்காலையில் அவ்வண்டியுருளின் சுவடுங் குதிரைக்குளப்படிகளின் சுவடும் அதுசென்ற வெளிநிலத்திலாவது பாட்டையிலாவது பதிந்துளவா என்று நோக்க அஃதொன்றுமே அங்குக்காணப்படவில்லை. அவ்வூரிலுள்ளாரிடம் அவ்வண்டியைப்பற்றியும் அதிலிருந்தவர்களைப்பற்றியும் எவ்வளவோ கருத்தாய் உசாவியும், ஏதொரு வரலாறும் புலனாயிற்றில்லை. ஆனாலும், யான் உரத்துக்கூவியது கேட்டு என்மனைவியும் புதல்வியுங்கூடச் சாளரத்தண்டை ஓடிவந்து அவ்வண்டியைக் கண்டார்கள். இது நிகழ்ந்தது 1878, ஆகஸ்டு, 23-ஆம் நாளிலாகும்.” என்பது.

இந்நிகழ்ச்சியின் உண்மையை ஆராய்ந்தறியச் சென்ற “உயிர்நிலை ஆராய்ச்சிக்கழக” ஆசிரியர் ஒருவர் (Podmore), அவர்கள் கண்டது பருப்பொருள் வண்டியன்று என்பதனை ஆராய்ந்து உறுதியாகத் தெரிந்துகொண்டார். பருப்பொருள் வண்டியாயிருந்தால் அது திரும்புதற்குப் போதுமான இடம் அப்பக்கத்தில் இல்லை. மேலும், அவ்வண்டி சென்ற மைதானவெளி பாசிபடர்ந்து புல் அடர்ந்த ஈரநிலமாயிருந்தது. அதன்கண் அவ்வண்டியுருள்களின் சுவடும் சிறிதுதானுங் காணப்படவில்லை. அவர்களது வீட்டின்முன்னே அவ்வண்டி சில இமைப்பொழுதுதான் நின்றிருக்கலாம். அதனைக்கண்ட துரைமகனார் அதன்மேலிருந்த இருவரோடு பேசியும் அவர்களிடமிருந்து விடையேதும் வரவில்லை. மேலும், அத்துரைமகனாரைப்போலவே, அவர்தம் மனைவியும் புதல்வன் புதல்வியரும் அதனைக் கண்டுளார். அதனால், அதனை வெறும் பொய்த்தோற்றமென்றுங் கூறுதல் பொருந்தாது. ஆகவே, அவ்வண்டியின் தோற்றம் முன்பின் அறியப்படாத ஒரு புதுமையாகவே கொள்ளற்பாலதாயிருக்கின்

றது. இங்ஙனமே இன்னும் வண்டியின் றோற்றங்கள் பல பலர்க்குப் பலகாற் பலவிடங்களிற் றோன்றியிருக்கின்றன.

இனி, வண்டியின் தோற்றங்களேயன்றி, மெய்யான பருப்பொருள் வண்டிகள் செல்லுங்கால், அவற்றையடுத்து மக்களைப் போன்ற சில உருவங்கள் தொடர்ந்துசெல்லுதலையும் அவ்வண்டிகளின் உள்ளேயும் வெளியேயும் இருந்தவர்கள் கண்டிருக்கின்றார்கள். அதற்கோருண்மைநிகழ்ச்சியினை ஈண்டெடுத்துக்காட்டுதும்; 'ஸ்டோன்' எனப்பெயரிய ஓர் அம்மையார் பின்வருமாறு வரைகின்றார்:—

“வேனிற்காலத்தொருநாள் இனிய மசங்கல்மாலையில் யானும் என் மருகியும், என்தோழியும் வேலைக்காரனும் ஒருவண்டியிற் போய்க்கொண்டிருந்தோம். அப்போது எமது வண்டியின் வலதுகைப்பக்கத்தே ஓர் ஆடவன் எங்கள் குதிரையின் தலைமாட்டில் மிதந்துசெல்வதுபோல் நடக்கக்கண்டேன். என்தோழி 'மேரி' என் அண்டையில் அமர்ந்திருந்தாள். எனது மெல்லிய குரலில் அவளுக்கு அவ்வாடவன் உருவினைச் சுட்டிக்காட்டினேன்; ஆனால், அவள் கண்களுக்கு அது தென்படவில்லை என் மருகியும் வேலைக்காரனும் எனக்கெதிரேயுள்ள இருக்கைமேல் இருந்தார்கள். யான் சொல்லியதைக்கேட்டு என் மருகி தன் முகத்தைத்திருப்பிப்பார்த்து, 'நீங்கள் சுட்டிய ஆடவன் உருவினை யானுந் தெளிவாய்க்காண்கின்றேன்' என்றனள். எங்கள் வேலைக்காரனோ திகில்கொண்டகுரலினனாய், 'அம்மா, ஒன்றும் பேசாதீர்கள்! சும்மாயிருங்கள்!” என்று மெல்லச்சொல்லினான். குதிரைகளும் மற்றைவிலங்கினங்களும் ஆவியுருவங்களைக் கண்டு வெருள்கின்றனவென்று பலர் சொல்லக் கேட்டிருக்கின்றேன். ஆனால், எங்கள் வண்டியிற்சென்ற குதிரையோ சிறிதும் வெருண்டோடவில்லை; ஒரேவகையான ஓட்டத்திலேயே ஏகியது; அஃது அங்ஙனஞ்சென்ற தன்மையினை எண்ணிப்பார்க்க அஃது அவ்வாடவனுருவினால் அடக்கப்பட்டே அவ்வாறு சென்றதென அறியலானேன். அவன் முகம் எங்கள் பக்கமாயின்றி எதிரே திரும்பியிருந்தமையால் அவனது முகம் என் கண்களுக்குத் தெரியாவிட்டாலுங், கரிய உடைபூண்ட அவ்வாண்மகனுருவம் எனக்கு நன்கு புலனாகியபடியே தொடர்ந்து முற்சென்றது. என்

மருகியும் ஏவலனும் அதனைத் தெளிவாய்க்கண்டனர். அவ்வுரு அம்மாலைக்கால வெளிச்சத்தில் தெற்றெனத் தோன்றியும், என் தோழிமட்டும் அதனைக் காணக்கூடவில்லை; அவள் என்பக்கத்தே யிருந்தமையால் எமக்கு எதிரே முன்னேறிச்சென்ற அவ்வாடவனுருவினை, மற்றையிருவரையும்விட அவடான் எளிதிற் காணக்கூடியவளாய் இருந்தாளாகல்வேண்டும். இனி, நாங்கள் 'சார்மின்ஸ்டர்' என்னும் ஊருக்கு அணித்தாக வந்தவுடனே, அவ்வுருவம் மறைந்துபோயது; அதனை மீண்டும் யாங்கள் பார்க்கவேயில்லை. அப்பாட்டையிற் பேய்கள் நடமாடுவதுண்டென்று இதற்குமுன் நாங்கள் கேட்டதுமில்லை.” என்பது.

இம்மெய்ந்நிகழ்ச்சியிற் காணப்பட்ட ஓராண்மகனுருவின் றோற்றம், அதனைக்கண்ட மாதர் இருவராலும் ஏவலன் ஒருவனாலும் இதற்குமுற் சிறிதும் அறியப்படாததாகும். அப்பாட்டையிற் பேய்கள் இயங்குவதுண்டென்று அவர்கள் யாருங் கேட்டதில்லாமையால், அவர்களது அச்சவுள்ளத்திலிருந்து அத்தோற்றம் உண்டாகியதென்று கூறுதலும் ஆகாது. ஆதலால், ஆவியுலகில் நிற்கும் ஒரு குதிரைக்காரனது ஆவியுருவமோ, அல்லதவன்றன் நினைவுருவமோ அந்நேரத்தில் அம்மூவர்கண்களுக்கும் புலனாகி அவர்தம் வண்டிக்குதிரையினை ஏவிக்கொண்டு சென்றதாகல் வேண்டுமெனக் கொள்ளுதலே பொருத்தமுடைத்தாம். அற்றேல், அவ்வண்டியுட்சென்ற நால்வரில் மூவர்கண்கட்குப் புலனாகிய அவ்வுருவம் ஏனையொருமாதுக்குப் புலனாகாமை யென்னையெனிற்; பருப்பொருள் வடிவுகளையன்றி நுண்பொருளுருவுகளைக் காண்டற்கியைந்த பதம் அம்மாதுக்கு உண்டாகவில்லையென்று தெரிந்துகொள்க. இனி, மூவர்கண்ட ஒருபெண்மகளுருவின் தோற்றத்தை இங்கெடுத்துக்காட்டுதும். 'மந்துகோமாரி' என்னும் மாதரார் ஒருவர் பின்வருமாறு வரைகின்றார்:-

“1875-ஆம் ஆண்டு வேனிற்காலத்து ஒருநாட் பிற்பகலில் 4-மணிக்கு யானும் என் தங்கையும் ஒரு வேலைக்காரப்பையனுடன் ஒரு குதிரைவண்டியிலேறி எங்கள் வீட்டைநோக்கிப் போய்க்கொண்டிருந்தோம். அப்போது திடீரென ஒருபெண்மகளுருவம் பாட்டையின் ஓரமாயுள்ள வேலிமேலிருந்து அரவமின்றி மிதந்துகொண்டுவந்து அப்பாட்டையின் குறுக்கேசென்

றது. அவ்வுருவம் முழுதும் வெள்ளாடையுடுத்திருந்தது; அஃது ஒருபக்கம் சாய்ந்த உடம்பினதாய் நிலத்துக்குமேற் பத்தடியுயரத்தில் ஏகியது. அதனைக்கண்டதும் எங்கள் குதிரை திடுமென நின்றுவிட்டது; அச்சத்தினாற் குதிரையின் உடலம் நடுநடுங்கியது; அதனால் அதனை ஏவிச்செலுத்துதலும் இயலவில்லை. உடனே யான் என் தங்கையை விளித்து, 'நீ அதனைக்கண்டனையா?' எனவினவ, அவளும் 'ஆம், அதனைப்பார்த்தேன்' எனத் திகிலுடன் கூறினள்; கூடஇருந்த ஏவற்காரச் சிறுவனுந் தான் அதனைப்பார்த்ததை நடுக்கத்துடன் சொல்லினான். இதற்குள் அப் பெண்மகளுருவமானது அப்பாட்டையின் அப்பக்கத்துள்ள வேலியை மேற்கடந்து ஒரு வயல்வெளிமேற் சென்றது; அதனை நாங்கள் உற்றுப்பார்த்துக்கொண்டிருக்க, அது தொலைவிற்காணப்பட்ட ஒருதோட்டத்தினூடே புகுந்து மறைந்துபோயது. ஆக, நாங்கள் அதனைக்கண்டது இரண்டுநிமிஷநேரந்தான் இருக்கலாம். அவ்வுருவம் அங்ஙனம் ஏகியபோது அதன் காலடிகள் நிலத்தைத்தொடவேயில்லை; அஃது அமைதியாய் மிதந்து நீளச்சென்றது. பிறகு நாங்கள் இல்லம் போய்ச் சேர்ந்தவுடனே எங்கள் அன்னையார்க்கு யாங்கள்கண்ட அத்தோற்றத்தைப்பற்றிச் சொன்னோம். அஃது எங்கள் நினைவின்றோற்றமும் அன்று, வேறு எத்தகைய பொய்த்தோற்றமும் அன்று என்பதை நான் உறுதியாய்ச் சொல்வேன். இதற்குமுன்னாவது பின்னாவது யான் இத்தன்மைத்தாகிய உருவத்தோற்றத்தைக் கண்டதேயில்லை. அப்போது நாங்கள் உடல்நல மனநலத்தோடிருந்தோம். அதற்குமுன் வேறெவரும் அவ்வியல்பினதாகிய ஆவியின்றோற்றத்தைப்பற்றி எங்கட்குச் சொல்லி எங்கள் நினைவை அதிற் படியவைத்தது மில்லை. ஆனால், அப்பாட்டையிற் பேய்கள் உலவுவதுண்டென்றும், அப்பக்கத்துக் குடியானவர்கள் சிலர் ஓர் ஆவியின் உருவினை ஒரோவொருகாற் காண்பதுண்டென்றுஞ் சிறிதுகாலத்திற்குப்பின் சிலர் சொல்லக்கேட்டேன்." என்பது.

இனி, ஆசிரியர் 'செஸ்டர் பீல்டு' என்பாரும் அவர் மனைவியாருங் கண்டதோருருவின்றோற்றத்தைப்பற்றி அவ்வாசிரியர் எழுதிவைத்த கடிதத்தினை இங்கே மொழிபெயர்த்து வரைவாம்:-

"மிகப்புதுமையானதொரு நிகழ்ச்சி என் கண்முன்னே இவ்வாண்டில் (1625) நிகழ்ந்தது. யான் ஒரு வழக்கின்பொருட்டு இலந்தன்மாநகரில் வந்திருந்தேன். ஒருநாட்காலையில் 8-மணிக்கு யான் துயிலொழிந்து கண்விழித்ததும், என்கட்டிலுக்கு இரண்டுமுழம் எட்டித், தலைமேல் ஒரு முடிச்சுடைய ஒருவெள்ளிய ஆடையைத் தொங்கவிட்டாலென்ன, நான்கு அல்லது ஐந்தடியுயரம்வாய்ந்த ஏதோ ஒரு வெண்மையான உருவம் நிற்றலைத் தெளிவாய்க்கண்டேன். அதனைச் சிறிதுநேரம் நோக்கியதும், இன்னும் நன்றாய் அதனைக்கண்டு தெளிதற்பொருட்டு என்படுக்கைமேல் எழுந்து உட்கார்ந்தேன். பின்னர் என்னிரண்டு கைகளையும் நீட்டி அதனைப்பிடிக்கமுயன்றேன்; உடனே ஒரு நொடிப்பொழுதில் அஃதென் கைகளை விட்டு நிழல்போல் வழுவி என்கட்டிற் கால்மாட்டண்டை சென்றது. யானுங் கட்டிலைவிட்டுக்குதித்து அதனைப் பின்றொடர்ந்தேன்; ஆனால், அது மறைந்துபோயது. இத்தோற்றத்தைக் கண்டபின், என் மனைவிக்குத்தான் யாது நேர்ந்ததோவென ஐயங்கொண்டேன். என் மனைவியைச் 'சசெக்ஸில்' உள்ள 'பெட்வர்த்' நகரில் அவடன் தந்தையார் இல்லத்தில் விட்டுவந்தேனாதலால், அவளைக்காண்டற்கு உடனேகுதிரையூர்ந்துசென்றேன். சென்று, அவ்வில்லத்தின் மேன்மாளிகைக்கு மேற்போகையில் என் ஏவலன் ஒருவன் எனக்கு வந்த கடிதங்களைக் கட்டியெடுத்துக்கொண்டு என்னிடம் வருதற்குப் படிமேல் இறங்கிவரக்கண்டேன். அவன் என்னிடம் தான் வருவதாகப்புகன்றமையால், அவன் கையிலிருந்த கடிதக்கட்டை யான் வாங்கிக்கொண்டு, மேலே என் மனைவிபால் ஏகினேன். என்மனைவி தன் தங்கையுடனும் மற்றொருதுரைமகளுடனும் உடல்நலத்தோடிருந்தனள். என்னைப்பார்த்ததும், அவர்களெல்லாரும் 'முன் எண்ணியதற்குவேறாக இப்போது இவ்வளவு விரைந்து திரும்பியது ஏன்?' என என்னைக்கேட்டனர். அதன்மேல், அன்றைக்காலையில் யான் கண்ட தோற்றத்தினைப்பற்றி அவர்கட்கு எடுத்துரைத்தேன். அதுகேட்டு வியப்புற்ற அவர்கள், என் ஏவலனிடமிருந்து யான்பெற்ற கடிதக்கட்டைப் பிரித்து அதிலுள்ள கடிதங்களைப் படிக்கும்படி என்னைக்கேட்டுக்கொண்டார்கள். அங்ஙனமே யானும் அதனைப்பிரித்து முத

வில் என்மனைவி எனக்கெழுதியிருந்த கடிதத்தை எடுத்து உரக்கப்படித்தேன். அக்கடிதத்தில் அவள், தான் அன்றைக்காலையில் முழுதும் வெண்மையானதோர் உருவங் கரியமுகத்தினதாய்த் தன் படுக்கையின் பக்கத்தே நிற்றலைக்கண்டமையால், எனக்கேதேனுந் தீது நேருமோ என அஞ்சி உடனே யான் திரும்பிவரும்படி வேண்டி வரைந்திருந்தனள். யாங்கள் கண்ட அவ்விருதோற்றங்களின் நிகழ்ச்சிக்குறிப்புகள் அத்தனையும் யாங்கள் ஒப்பிட்டு நோக்க, அதேநாளின் அதேபொழுதில் அதேமணிநேரத்தில் யான் கண்டபடியே நாற்பதுகல் தொலைவிலிருந்த என் மனைவியும் அத்தோற்றத்தைக் கண்டமை புலனாயிற்று.'' என்பது.

இனிக், 'குவினி' என்னும் ஒருமருத்துவ ஆசிரியரும் அவர் தம் மனைவியாருந் தாம் குடியிருந்த ஒருமாளிகையில் 1853-ஆம் ஆண்டு கண்டதோர் உருவின்தோற்றத்தை அவர் வரைந்த கடிதத்தினின்றே ஈண்டு மொழிபெயர்த்து எழுதுவாம்:-

''ஒருநாளிரவில் (துயில்கொள்ளச்செல்லும்முன்) முழுதும் உடைபூண்டிருந்ததோர் உருவம் எனது கட்டிலின் கால்மாட்டிலிருந்து குறுக்கேபோய் அடுப்பண்டை அணுகக்கண்டேன். அது தனதுகையைஉயரத் தூக்கி, அவ்வடுப்பின்மேலுள்ள பலகைமேல் எரிந்துகொண்டிருந்த விளக்கினைச் சுட்டியது. அந்நேரத்தில் என்மனைவி என்கையைப் பிடித்துக்கொண்டாள். அப்போது அடுப்பின் பலகைமேலிருந்த விளக்கு அணைக்கப்பட்டது. விளக்கு அவிந்துபோனாலும், அவ்வுருவங் கதவண்டை சென்றதைத் தெளிவாய்க்கண்டேன். எங்கள் வேலைக்காரிகளில் ஒருத்திதான் அங்ஙனம் எங்கள் அறையினுள்ளே நுழைந்திருக்கவேண்டுமென யான் எண்ணி, என்படுக்கையினின்றுங் குதித்து அவளை மறிக்கமுயன்றேன்; ஆனால், அங்கொன்றும் இல்லை. அதன்மேல் அவ்வறையின் வாயிற்கதவண்டை பாய்ந்து, எங்கள் உடம்பாடின்றி இராவேளையிற்புகுந்த அவளைப் பின்றொடரவும் முயன்றேன். ஆனால், வழக்கப்படி அவ்வாயிற்கதவு பூட்டப்பட்டிருந்தது. என்மனைவியோ பெரிதுந் திகில்கொண்ட நிலையிலிருந்தாள். நான் கண்டது யாது? என்று அவள்வினவ, யான் அவ்வுருவின் றோற்றத்தை எடுத்துரைத்தேன். அதுகேட்டு, அவள் தானும் அதேகாட்சியினைக் கண்டதாகக் கூறியதோடு, அவ்வுருத்

தன்கையை அவ்விராவிளக்கின்மேல் வைத்து அதனை நிறுத்திவிட்டதெனவும் மொழிந்தாள்.

அவிந்துபோன விளக்கைத் திரும்பவும்ஏற்றி முகங்கழுவும் ஏனத்தில் வைத்திட்டோம்; பின்னர் அஃது எப்போதும்போல் எரிந்தது. யான் அவ்விளக்கு நின்றுபோனதைப் புகைப்போக்கியின்வழியே கீழ்வீசிய காற்றின் செயலாக நினைந்து என் மனத்தைத் தேற்றிக்கொண்டேன்; என்றாலும், அவ்வுருவந்தோன்றிய காரணம் புலப்படவில்லை.'' என்பது.

உயிர்நிலை ஆராய்ச்சிக்கழகத்தார் 'குவினி' என்னும் அம்மருத்துவஆசிரியர் கண்ட இத்தோற்றத்தைப்பற்றி அவர் தம் மனைவியாரை எழுதிக்கேட்க அவர் பின்வருமாறு விடையெழுதினார்:-

''என் கணவனார்கூறிய உறுதிமொழியைப் படித்துப்பார்த்தேன். தாம்கண்ட ஆவியுருவத்தைப்பற்றி அவர் மொழிந்தவைகள், யான் அதனைக் கண்ட நினைவுடன் இணங்கியனவாகவேயிருக்கின்றன. அவ்வுருவந் தன் கையை இராவிளக்கின்மேல் வைத்து அதனை அணைத்ததை யான் தெளிவாய்க்கண்டேன். யான் அச்சத்தால் என் கணவர் கையைக் கெட்டியாய்ப்பிடித்துக்கொள்ள முயன்றேன்; ஆனால், அவர், பின்னர்த்தெரிவித்தபடி, யாரோ உள்நுழைந்தவரை மறிப்பதற்காக எமது படுக்கையினின்று கீழேகுதித்துவிட்டார். அவ்வறைவாயிற்கதவு என்றும்போற் பூட்டப்பட்டிருந்தது; அவர்போய் அதனைத் திறக்க முயன்றபோதும் அஃது அங்ஙனமேதான் இருந்தது. உடனே அவர் ஒரு மெழுகுதிரியை ஏற்றினார்; ஏற்றிக் கட்டிலின்கீழும் உள்ளறையும் நோக்கினார்; ஆனால், ஒன்றுங்காணவில்லை. இராவிளக்குந் திரும்பக்கொளுத்தப்பட்டு, முகங்கழுவும் பாண்டந் தாங்கியின்மேல் வைக்கப்பட்டு, மெழுகுதிரிவிளக்குடன் இரவு முழுதும் எரிந்தது. அவ்வீட்டிற்கு யாங்கள் குடிவந்து தங்கும்முன் நான் இரவில் விளக்குவைப்பதேயில்லை; ஆனால், அதிற்குடிபுகுந்தபின் எவரோ பெருமூச்சுவிடும் ஓசையுங் குறட்டையும் அடிக்கடி என்படுக்கையின் அண்டையில் உண்டாகி என்னை மிரள்ச்செய்தமையால், யான் இரவில் விளக்கெரியவிடலானேன். என் கணவனார் அவ்வுருவத்தோற்றத்தைத் தாமும் யானுங் கண்ட

பின், திகில்கொண்ட என்னை அமைதிப்படுத்தும்பொருட்டு, நிலாவெளிச்சமும் மாசியின்நிழலுஞ் சாளரத்தூடே தோன்றினமையால் அத்தோற்றம் உண்டாயிருக்க வேண்டுமென்றும், விளக்கு அவிந்துபோனது புகைப்போக்கியின்வழியே கீழிறங்கி வீசிய காற்றினால் நிகழ்ந்திருக்கவேண்டுமென்றும் வற்புறுத்திச் சொல்லி எனது அச்சத்தையாற்றமுயன்றார். ஆனாலும், நாங்கள் இருவரும் ஒரேநேரத்திற் கண்விழித்து, நீண்டு ஒரு துறவுமாதைப்போல் உடையணிந்திருந்த அவ்வுருவத்தைக்கண்டு, அஃது அவ்வறையின்கண்ணுள்ள அடுப்பண்டையிற்சென்று அதன் மேற்பலகையில் எரிந்துகொண்டிருந்த விளக்கையுந் தனது வலக்கையால் அணைக்கப்பார்த்தபிறகு. அதைப்பற்றி வேறுவகையாக நினைப்பதற்கு இடமேயில்லை. என் கணவனார் தம்முடைய கைகளைநீட்டி அவ்வுருவினைப்பிடித்து நிறுத்தமுயன்றபோது, அவ்வுருவந்திரும்பி அவ்வாயிற்கதவினூடே போகாநிற்கையில் அதனுடை சரசரவென ஒலித்ததையும் நான் தெளிவாய்க்கேட்டேன். நிலவொளி மிகவுந் தெளிவான துலக்கமுடையதாய்த் திகழ்ந்தது; சாளரத்தின் வெள்ளியதிரை அதனை ஒருபக்கமேதான் மறைத்திருந்தது.'' என்பது.

'குவினி' என்னும் மருத்துவ ஆசிரியரும் அவர்தம் மனைவியாரும் அவ்வீட்டிற் குடிபுகும்முன்னமே, அத்தகைய தோற்றங்கள் அங்கு நிகழ்ந்ததனை மற்றும் பலர் பலகாற் சொல்லியிருக்கின்றனர். ஆனால், அம்மருத்துவ ஆசிரியர்க்கும் அவர்தம் மனைவியார்க்கும் அந்நிகழ்ச்சிகளைப்பற்றியது ஏதொன்றுமே முன்னரே தெரியாது. ஆகலால், அவர்கள் அந்நிகழ்ச்சிகளைப் பிறர் சொல்லக்கேட்டதிலிருந்து, அவர்களது உள்ளத்தின்கட்டோன்றிய உருவெளித்தோற்றமே அவர்களுடைய கண்களுக்கு அவ்வாறு காணப்படலாயிற்று என்று கூறுதற்குச் சிறிதும் இடமே இல்லை. இனி, மேற்சொல்லிய தோற்றத்தைக் கண்டபிறகு அவ்விருவரும் அவ்வீட்டைவிட்டு வேறு ஒரு வீட்டுக்குக் குடிபோயினர்.

இனி, மூவர்க்குக் கட்புலனான ஓர் உருவத்தோற்றத்தைக் குறித்துப் 'பெத்தானி' என்பார் 1884-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்களிற் பின்வருமாறெழுதினார்:-

PLEASE SEND YOUR SUBSCRIPTION RS 2 FOR

THE OCEAN OF WISDOM

A high class English bi-monthly magazine
Edited by the great veteran scholar

SWAMI VEDACHALAM

Master of the Sacred Order of Love, Pallavaram, &
Formerly Lecturer in Tamil in the Madras Christian College.

This magazine is unique in kind being the only periodical in English which acquaints the English knowing world with the history, the religion, the philosophy and the literature of the Tamil country, by publishing in it not only original articles on these subjects but also translations of some important Tamil works with exegetical commentaries.

Except Dr. Caldwell's great work *"The Comparative Grammar of the Dravidian Languages,"* and Dr. G. U. Pope's excellent translations of some Tamil classics, there is little in English worthy of note that helps to a correct understanding of the products of the Tamilian intellect. While even the savage races dwelling in caves and forests that lie in the out-of-the-way corners of the world, have bulky volumes written of their lives, customs and manners by such brilliant writers as Frazer, Westermarck and others, it is greatly to be deplored that the Tamils who had been the first civilized nation of the ancient world have no adequate representation in the historical, religious and philosophical literature in English. Neither in the famous *Sacred Books of the East* series of 49 vols. edited by that great oriental scholar Prof. Max Muller, nor in the still later *Harvard Oriental Series* of 32 vols. edited by Dr. C. R. Lanman of Harvard University, is there included any old Tamil work either literary or religious. So deplorable an absence of even eminent Tamil works in English is due as much to the growing and unexampled selfishness of the rich Tamils and their extreme ignorance of their own literature, as to the poverty and illiteracy of the ordinary people and to the unlimited aversion shown by the priestly classes to Tamil. If this lamentable state of affairs should cease to continue, if the enlightened Tamilians should like to secure a proper place for themselves and their descendants in the midst of the advancing nations of the modern world, they must seek at once to remedy these defects and work themselves up to get their glorious literary heritage fully represented in English.

Please therefore let a little of your hard-earned money be given for espousing the cause of Tamil a great and the only ancient language still alive and making a correct representation of its history and literature to the world in English, since they are being grossly misrepresented by oriental scholars and since there is not a single organ in English to plead for Tamil & Tamilian thought Please also induce your friends to subscribe to this and oblige by

sending their addresses to the editor so that he may send this by V. P. P. and receive their subscription.

You will also greatly further the cause by contributing articles to this on the language, literature, religion, philosophy and history of the Tamil people.

Besides many original little articles, the following appear in the first volume serially and will form into separate treatises when completed:-Ancient & Modern Tamil Poets, The Conception of God as Rudra, The Saiva Siddhanta as a Philosophy of Practical Knowledge.

Some of the opinions expressed by some eminent

Subscribers on receiving the 1st no. of The Ocean of Wisdom

Mr. K. M. Chellappah, District Court, Jaffna:—"I have received your post card, also the copy of The Ocean of Wisdom by V. P. P. which I have duly honored. I have finished reading your paper including the cover. I congratulate you on your noble and bold attempt. This should have been attempted long ago. No harm. At least you have started it now. The subjects chosen already indicate our superiority over all others. I have been able to understand the matter through English better. Several writers merely copy what the westerners say and force on us. This ought not to be. I am glad your presence in the field will purify the stuff and keep the field clean."

Mr. R. Sabhanayakam, National Bank of India Ltd., Colombo:—"I am in receipt of the first copy of The Ocean of wisdom, for which please accept my grateful thanks. I shall mention your paper to the friends who might be interested."

Mr. A. Navaratnarajah, Office of the Divisional Superintendent of Post Offices, Kandy, Ceylon:—"I am thankful that my name is still in your records and that I am enabled to contribute in my own little way towards a cause so worthy and admirable."

Mr.V. Kandiah, Audit Office, Colombo:—"Thanks very much for your kind card. Before I could read through your magazine it was snatched from my hands and it is still in circulation. Admittedly your field is in Ceylon. Even Indians are stunned at the sway you hold here."

ஈழகேசரி ஆண்டுமடல்

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த சுன்னாகத்தில் ஈழகேசரி எனப்பெயரிய சிறந்த கிழமையிதழை நடாத்துந் திருவாளர் நா. பொன்னையனவர்கள், இத்தமிழாண்டுக் குரியதொரு வெளியீடாகப் பதிப்பிட்ட ஈழகேசரி ஆண்டுமடலை நமது பார்வைக்கு விடுத்தமைக்காக நன்றிபாராட்டுகின்றேம். அரிய பல பழந்தமிழ் நூல்களை முதன்முதல் இத்தமிழுலகிற்கு வெளியிட்டுதவிய மறைத்திருவாளர் ஆறுமுக நாவலரவர்கள், திருவாளர் சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் முதலான பெரியாரின் திருவுருவ ஓவியங்களுந், தமிழ்வல்ல அறிஞர் பலரால் எழுதப்பட்ட அரிய தமிழ்க்கட்டுரைகளும் இவ்வாண்டுமடலில் நிரம்பியுள்ளன. அழகியபதிப்பு; 100-பக்கம், விலை அரை ரூபா.